விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 10 ஜுலை 18 இதழ் 166

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-7-1986

## மதவாச்சிப் பகுதிகளில் தொடரும் தாக்குதல்கள்

வவனியா, சனி

தனியார்லொறியில்வந்தநால்வர், குண்டர் கோஷ்டி ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்த ரொக்கப் பணமும் கொள்ளை அடிக்கப்பட்டது.

அதே சமயம் மலையகத்திலிருந்து தனியார் பஸ்ஸில் வந்தளஸ் இராமநாதன் (45 வயது)என்பவரும் தாக்குதலுக்குள்ளாகி குறுக்குப்பாதைகளுக்கூடாக வந்து வவனியா ஆஸ்பத்திரியில் அனு திக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதவாச்சிக்கு அண்மையிலுள்ள பூனைவை என்னுமிடத்தில் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தனியார்லொறியில்வந்த யாழ் கொட்டடியைச் சேர்ந்த வில்லூண்டிசோலைபுரம் கந்தசாமி (25வயது) இராசையா (35 வயது) சக்திவேல் (30) ஆகியோரே தாக்குதல்களுக்குள்

(9ம் பக்கம் பார்க்க)

# வடக்கும்கிழக்கும்நேற்று முற்றுகச் செயலிழந்தன

யாழ்ப்பாணம், சனி

**இனப்படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழ்பேசும் மக்கள் ஒன்ருக இணைந்து நடத்திய எதிர்ப்புத் தினத்தினல் நேற்று வடக்குகிழக்கு மாகாணம் முற்ருக ஸ்தம்பித்தது.**

கச்சேரி, கல்லூரிகள், அரச மற்றும் தனியார் காரியாலயங்கள் சந்தைகள், சினிமாத் தியேட்டர்கள், மதுபானக் கடைகள் யாவும் செயலிழந்தன.

வாகனப் போக்குவரத்துக்கள் முற்ருக நடைபெறவில்லை.

யாழ்நகரில், அரசாங்க செயலகம், கல்விக் கந்தோர், கல்லூரிகள், பஸ் நிலையம், நவீன சந்தை முதலியன வெறிச்சோடிக் காணப்பட்டன.

யாழ். அரசாங்க செயலகத்திற்கு நேற்று எந்த ஊழியரும் சமுகமளிக்கவில்லை.

யாழ் மாநகராட்சி மன்றக் காரியாலயங்களும் மூடப்பட்டிருந்தன. சில ஊழியர்கள் வந்திருந்த போதிலும் உடனடியாகத் திரும்பிவிட்டனர்.

நீதிமன்றங்களுக்கு ஊழியர்கள், சட்டத்தரணிகள், கட்சிக்காரர்கள் சமுகமளிக்காதமையினுல் விசாரணைகள் நடைபெறவில்லை.

வ பி.போ. ச. பஸ்கள், மினிபஸ்கள், லொறிகள், கார்கள், டாக்ஸிகள் ஓட்டோக்கள் எதுவுமே நகர வீதிகளில் காணப்படவில்லை.

நகர வீதிகளில் ஒருசில சைக்கிள்கள் மட்டுமே காணப்பட்டன. நகரவீதிகளில் ஜன நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில், வழக்கத்திலும் பார்க்க குறைவான நோயாளிகளே வந்திருந்தனர்.

இறைச்சிகடைகள் மற்றும் மீன் சந்தையாவும் முற்ருகப் பூட்டப்பட்டிருந்தன

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி ஊழியர்கள் சிலர் நேற்றுக் காலை பணியாற்றவந்திருந்த போது. தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்தின் இணைப்புக்குழுவினர் அவர்களை உள்ளே செல்ல வேண்டாம் என்று விடுத்த கோரிக்கையை அடுத்து அவர்கள் திரும்பிச் சென்றனர்.

யாழ். மாநகரசபை காரியாலயத்திற்கு வந்த சில ஊழியர்கள் வரவுப் புத்தகத்தில் கையொமுத்திட்டபோது அப்புத்தகத்தைச் சிலர் எடுத்துசென்றுவிட்டதாகவும், நல்லூர் இந்துவிடுதியிலுள்ள காரியாலயத்திற்கு வந்த சில ஊழியர்கள் கடுதாசி ஒன்றில் கையெழுத்திட்டபோது அதனைச்சிலர் பறித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில கல்லூரிகளில் ஆசிரியர்கள் வழக்கமான நேரத்துக்கு

(9ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்ததால் ஊழியர் வெளியேற்றம்

[மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்]

மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்றுப் பூரண எதிர்ப்புத்தினம அனுஷ்டிக்கப்பட்டது

நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரைபரவலாகக் குண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தவண்ணமிருந்தது.

மட்டக்களப்பு இ. போ. ச டிப்போவிலிருந்து காலையில் முதல் பஸ் புறப்பட்டபோது, டிப்போ வாசலில் குண்டொன்று வெடித்தது இதனைத் தொடர்ந்து பஸ்சேவை முற்ருக ஸ்தம்பிதமடைந்தது.

மட்டக்களப்பு கச்சேரி காவலாளியிடமிருந்து 'கேட்' திறப்பை போராளிகள் துப்பாக்கிமுனையில் பறித்துச்சென்றனர். இதுசம்பந்தமாக அரசாங்க அதிபர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் கச்சேரிக்குச்சென்று பூட்டை உடைத்து திறந்துஊழியர்களை

(9-ம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளத்தில் கைதான 9 பேர் விடுதலை

வவனியா வெள்ளி

சந்தேகத்தின்பேரில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு ஆணையிறவு இராணுவ முகாமில் தடுத்துவைக்கபபட்டிருந்த வவனியா செட்டிக்குளம் பகுதியைச்சேர்ந்த ஒன்பது பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையானவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

(9ம் பக்கம் பார்க்க)

## மன்னரில் நேற்று ராணுவம் சுட்டு தொழிலாளிபலி

(நமது நிருபர்)

மன்னர் மாவட்டத்தில் நேற்று எதிர்ப்புத்தினம் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்ட அதே சமயம் ஆயுதப்படையினரின் திடீர்ரோந்தும் அதிகரித்திருந்தது.

ரோந்து சென்ற ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சைக்கிளில் சென்ற இளம்தொழிலாளி ஒருவர் சென் செபஸ்தியார் கோவிலுக்கண்மையில் பலியானர் சிங்களப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார். மேலும் ஆசிரியர் ஒருவர்கைதுசெய்யப்பட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

## வல்வை கடற்படை காட்டிய "சமாதான சகவாழ்வு"

வல்வெட்டித்துறை, வெள்

நான்கு வள்ளங்களின் உதவியுடன் நேற்றுக் கப்பலிலிருந்த பொருட்களை கடற்படையினர் தங்கள் முகாமிற்கு எடுத்துச் சென்ற சம்பவம் வல்வெட்டித்துறையில் நடந்துள்ளது.

வழக்கமான தாக்குதல்கள் சித்திர வதைகளுக்குப் பதிலாக அன்பான உபசரிப்பு ஆதரவு வார்த்தைகளுடன் நான்கு வள்ளங்களிலிருந்த மீனவர்களைக் கவர்ந்து தங்கள் பொருட்களை பாதிப்பு எதுவுமின்றி முகாமிற்குப் படையினர் எடுத்துச் சென்ற

(9ம் பக்கம் பார்க்க)

## 'வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகமென சட்டபூர்வமாகஏற்கப்பட்டவை -குமார்

கொழும்பு, வெள்ளி

",தமிழ் மொழி (விசேஷ) ஏற்பாட்டுச்சட்டமும் நீதிமன்ற மொழிச் சட்டமும் நிறைவேற்றப்பட்டதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியதாயகம் என்ற உண்மை சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்களினுல் 1972 இலும், 1978 இலும் இது அரசியலமைப்பு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு போரதனை பல்கலைகழகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. குமார் பொன்னம்பலம் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

''மொழி விவகாரத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் முற்றிலும் மௌனம் சாதிக்கின்றன. தமிழ் மொழி உத்தியோக பூர்வ மொழியாக இருக்க வேண்டும் என்றும் சிங்களத்துக்குச் சமமானதாகக் கருதப்பட வேண்டுமென்றும், தமிழர்களும், முஸ்லிம்களும் விரும்புகிறார்கள் 25 வீதமான மக்களின் மொழி எவ்வாறு 75 வீதமான மக்களின் மொழியுடன் சமமானதாகக் கருதப்பட முடியும் என எவரும் கேட்பார்களேயானுல். இந்நாடு சகல மக்களுக்கும்

(9ம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினி செய்தி: 'புளொட்'டிலிருந்து 'உமா' விலக்கப்பட்டார்

கொழும்பு, வெள்ளி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு உமா மகேஸ்வரன் அந்த இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக, சென்னைச் செய்தியொன்றை ஆதாரம் காட்டி அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் செய்தி மேலும் தெரிவிப்பதாவது:

''தமிழீழ மக்கள் விடுதலை கழகத்துக்குள் பெரும் பிளவேற்பட்டுள்ளது. உமாமகேஸ்வரன் தலைமையிலான ஒரு குழுவினர் ஒரு கூட்டத்தை திருவாரூரில் நடத்தினர். ஈஸ்வரன் தலைமையிலான ஒரு குழுவினர் அதற்குப் போட்டியாக ஒரு கூட்டத்தை சென்னையில்நடத்தினர்.

''ஈஸ்வரன் குழுவினர் உமாமகேஸ்வரன் மீது தமக்கு நம்பிக்கையில்லையெனக் கூறி இயக்கதிதிலிருந்து அவரை வெளியேற்றினுர்கள்.

இயக்கத்தின் மத்திய குழுவில் 14 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்ருர்கள். இவர்களில் எட்டுப்பேரின் ஆதரவு தமக்கு இருப்பதாக ஈஸ்வரன் தலைமையிலான குழு கூறுகிறது. [பி]

## இன்று முதல் மீண்டும் வவனியா-கொழும்பு ரயில் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

இன்று சனிக்கிழமை முதல் வவனியாவுக்கும் கொழும்புக்குமிடையிலான ரயில்சேவை மீண்டும் நடைபெறும்.

இதுதொடர்பாக யாழ். புகையிரத நிலைய அதிபர் திரு. எஸ். பாலேந்திரன் 'ஈழநாடு' வுக்குத் தகவல் தருகையில் ரயில் பயணச்சீட்டுக்களை காசுக்கட்டளைகளைகொடுத்தே பயணிகள் பெறவேண்டுமென்றும், இக்காசுக்கட்டளைகள் பிரதம கணக்காளர் ரயில்வே திணைக்களம், தலைமைத்தபால் கந்தோர் என்ற விலாசத்துக்குப் பெறவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிலிருந்து காலை ஐந்தரை மணிக்குப் புறப்படும் ரயில் வவனியாவை

[10- பக்கம் பார்க்கம்]

# வரி விளம்பரம்

## தேவை

எமது காரியாலயத்தில் லிகிதராக கடமையாற்ற பெண்கள் இருவரும், கொழும்பு சென்றுவரக்கூடிய பிணைப் பணம் செலுத்தக்கூடிய ஆண் பிரதிநிதி ஒருவரும் தேவை. விபரங்களுக்கு: நிர்வாகி, சங்கர் ரவல் சேர்விஸ், 125 சிவன்கோவில் வடக்கு வீதி [வைத்தீஸ்வரா வித்தியாலய ரோட்], யாழ்ப்பாணம். [C 3683]

12'', 17'' கட்டர் [Disintegrator] விலை விபரத்துடன் தொடர்புகொள்க. மங்களபதி மெடிக்கல் ஹோல், 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C 3684]

3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு உடுவில், மருதனுமடம், இணுவில் சுற்றுடலில் மின்சார வசதியுடன் கூடிய சிறிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. C 3 80, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3680)

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்குக் கோழி தேவை. கிலோ 30/-க்கு மேற்பட்ட பல விலைகளில் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone: 23131. [C 3640]

மண்ணெண்ணை அல்லது மின்சாரத்தில் இயங்கும் [Incubator] குஞ்சுபொரிக்கும் மெசின் சிறிது பிழையிருப்பினும் தேவை. தயவுசெய்து விலை விபரங்களை கீழ்காணும் விலாசத்துக்கு எழுதுங்கள். றேடியோ மனுவல், 121, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C 3643]

## வகுப்புகள்

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு [Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M, 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611. (A 920)

T. V. பயிலுனர்க்கான புதிய வகுப்புகள் 02-08-86 ஆரம்பமாகவுள்ளன. பயிலுனரின் வசதிக்காக சனி, ஞாயிறு [இரு தினங்கள்] மட்டும் வகுப்புகள் நடத்தப்படும். பயில விரும்புபவர்கள் 01-08-86 முன் தொடர்புகொள்ளவும். விலாசம்: S. குணாளன், ரெலிகோணர், சாவகச்சேரி. [C 3701]

**SCIENCE CENTRE KARAVEDDY**

வெளியூர் மாணவர்களுக்கான பகல் நேர துரித வினா விடை வகுப்புக்கள் [இதுவரை பூர்த்தியடைந்த பகுதிகள்.]

கணிதம்/விஞ்ஞானம்
ஆங்கிலம்
க. பொ. த. (சாதாரண)
86 டிச
ஆரம்பம்: 01-08-86
முடிவு: 31-08-86
விண்ணப்ப முடிவு திகதி: 31-07-86
(C 3620)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### பயிற்சிகள்

ரேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங் இரண்டுமாத முழுநேர செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்படும். எலெக்றிக்கல் வயறிங் வீட்டு மின்சாரவேலை மின்சாரப்பொருட்கள் திருத்துதல் கூடிய நேர செய்முறைப்பயிற்சியுடன்! நீவைண்டிங் Computer Programming Basic, Quantity Surveying Spoken English. மீண்டும் பயிற்சி ஆரம்பம். 27-7-86 9-30. A.M விபரங்கட்கு:- Jaffna Technical Institute 52/1 றெயில்வே கடவைக்கு அருகாமை, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். [C-3657]

## விற்பனைக்கு

கோப்பாயில் கிறசரும் [16-10] இசுசு டிப்பர் லொறியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R பாலகிருஷ்ணன், இருபாலை ரோட், கோண்டாவில். [C 3656]

National Colour T V 20'' Model TC 211M, Usha fridge விற்பனைக்கு. தொடர்பு;- வை நவராசா ''மிதிலை'', குமாரசாமி புலவர்வீதி, சுன்னாகம். [C-3707]

Sisil குளிர் சாதனப்பெட்டி, Singer மின்சார, சாதாரண தையல் மெஷின், Table/Stand Fan, T V, Floor Polisher, தேக்கு அலுமாரிகள், Electric Cooker with oven, கட்டில்கள், றேடியோ கசற்றுகள், Kenwood Chef, செற்றி, சுவர் மணிக்கூடு மற்றும்பல விற்பனைக்குண்டு. சி பத்மநாதன். பிறீ மல்ரி சேவீஸ், திருநெல்வேலி வடக்கு (திருநெல்வேலி சந்திக்கும்யாழ். மருத்துவக்கல்லூரிக்குமிடையில்). [C-3705]

9ம், 10ம், 11ம், ஆண்டு மாணவர்களுக்கான முதலாம் பகுதி சமூகக்கல்வி மாதிரி வினா விடை வெளிவந்து விட்டது எல்லாப் புத்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் விலை ரூபா 8 50 ஆசிரியர்: செ. ஜேசுதாஸ். [C 3678]

அச்சகத்திற்குரிய பேப்பர் வெட்டும் நல்ல நிலையில் உள்ள கட்டர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சுவர்ணா 235/7, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C 3697]

Honda C 90 Re-condition ரூ 7,000/- சிங்கர் Zig-Zag Electric ரூ 3000/- 3-6 மணி ஸ்கந்தராசா. கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C 3700]

1985 ஆண்டுக்கான தமிழ், ஆங்கில சஞ்சிகைகள் விற்பனைக்குண்டு. Readers Digest 75-85 ஆண்டுக்கானவையும் உண்டு. ஞாயிற்றுக்கிழமை (27-07-86) பார்வையிடலாம். தொடர்பு: Y. M D A., 10, திருவள்ளுவர் அவெனியு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 24032 (C 3685)

Singer தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Play Pen, Cot, சிலவர், பித்தளை பாத்திரங்கள், கிளாஸ் வகைகள், றேடியோ, T. V, Show Case, கண்ணாடி மேசைகள், கட்டில் மெத்தைகள். Filter, அல்மாரி, National Blender, Volkswagen கார், மின் கேற்றல், கமரா, மின்விசிறி, நவீன தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், மாவடிச் சந்தியருகில். [C 3681]

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 1 ஸ்ரீ ஒஸ்டின் A50 கார் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமை [27-07-1986] எந்நேரத்திலும் பார்வையிடலாம் சிவராசா அவெனியூ, பலாலி வீதி, திருநெல்வேலி. [C 3712]

நல்ல நிலைமையில் உள்ள (Clacio) கிளாஸ்யோ குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. 95, பழைய டச்வீதி. கல்வியங்காடு என்ற முகவரியில் ஞாயிற்றுக்கிழமை [27-7-86] எந்நேரமும் பார்வையிடலாம். [C 3713]

## கல்வி

G C.E. [O/L]ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு, ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு, ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 17 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று நுணுக்கமானமுறையில்கற்பிக்கப்படும் மற்றும் 6 இலிருந்து [O/L], [A/L] சகலபாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். காலை 8 00 இற்குள் வீட்டில் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு கொள்ளவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி ஒழுங்கை, சுண்டுக்குழி. [C 3716]

## வாடகைக்கு

சகல வசதிகளுடனான சின்ன வீடு அல்லது annexe வாடகைக்குத் தேவை. விபரம் C வேலுப்பிள்ளை, ''பாக்கிய வில்லா'', கோவில் வீதி, கொக்குவில். [C 3682]

# மின் தடை

## இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-07-27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 K V. மின்பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்யஇருப்பதனால் காலை8 00 மணிமுதல் 4.00மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும் கோண்டாவில், கொக்குவில், கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்

இம் மின் தடையால் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
**மின் பொறியியலாளர்**

யாழ். பிரதேசஅலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம். [A955]

# கிராமப்புற பாடசாலைகளை மாணவர் நாடுகிறார்கள்!

கிளிநொச்சி வெள்ளி

''இன்று நகர்ப்புறங்களில் கல்வி கற்ற மாணவர்கள் கிராமப்புறங்களை நாடியே வருகிறார்கள். கிராமப் பாடசாலைகளின் மூலம் மாணவர்கள் நல்ல கல்வியைப் பெற முடியும். எனவே கிராமப் பாடசாலைகளை முன்னேற்ற வேண்டிய காலம் வந்துள்ளது.''

இவ்வாறு விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய புதிய கட்டிட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் எம். கதிரித்தம்பி தலைமையில் இவ்விழா இடம்பெற்றது.

திரு. தங்கராசா மேலும் பேசுகையில் பாடசாலைகளில் மாணவர்கள் நல்ல வசதிகளை அனுபவிக்க வேண்டும் இதற்காக பல கட்டிடங்கள் அமைய வேண்டியது அவசியமாகிறது. பாடசாலைக் கட்டிடங்கள் இன்றைய சந்ததிக்கு மட்டுமல்ல எதிர்கால சந்ததிக்கும் பயன் தரும் என்றார்.

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய முன்னாள் அதிபர் திரு சி. சரவணமுத்து, உசன் இராமநாதன் பாடசாலை அதிபர் திரு. க சிவபாதசுந்தரம் ஆகியோர் விசேட விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (இ)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வாங்கவும், விற்கவும் தொடர்புகொள்ளவும்! Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி [3ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். [C 3647]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த இல. 478/3, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமநாதன் ஜெயபாலனின் மரணச்சொத்து விடயத்தில்,

மரணித்தவர்.

ஜெயபாலன் கைம்பெண் இரத்தினேஸ்வரி, 478/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல.ரி/3980

எதிர்

1. ஜெயபாலன் சாந்திபூசன்,
2. ஜெயபாலன் மகள் மேனகாசாந்தி,
3. ஜெயபாலன் மகள் ஜனிதாசாந்தி, எல்லோரும் 478/3 கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், பராயமற்றவர்களின் வழக்குப்பாதுகாவலராக.
4. இராமநாதன் ஜெயராசா, 35/9, விபுலானந்த வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதாக இதனால் அறியப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியபபட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
இ ஜெயசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 3686

# ''ஷெல்'' அடியில் சிறுவன் காயம்

புலோலி. வெள்ளி

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இராணுவமோட்டார் ஷெல் தாக்குதல்களால் தம்பசிட்டியைச் சேர்ந்த வி சந்திரகுமார் [11 வயது] காயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்தசனிக்கிழமை பருத்தித்துறை இராணுவமுகாமிலிருந்து சுப்பர்மடப்பக்கமாக இராணுவத்தினர் வெளியேறி சில வீடுகளுக்குத் தீவைத்தபோது ஈ பி. ஆர். எல் எப் இயக்கத்தினர் எஸ். எஸ். 80 ரக மோட்டார்கள் மூலம் பதில் தாக்குதல்களை மேற்கொண்டபோது இராணுவத்தினர்முகாமிற்குத் திரும்பிவிட்டதாக ஈ பி ஆர். எல். எவ். இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். இத்தாக்குதலின் போது சில இராணுவத்தினர் பலியானதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் தமது தரப்பில் எதுவித சேதங்களும் இல்லை எனவும் ஈ பி ஆர் எல் எவ். இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் முகாமிற்குத்திரும்பியதும் மோட்டார் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் அதன் போதே சிறுவன் சந்திரகுமார் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களினால் கடந்த வாரம் பருத்தித்துறை முனையைச் சேர்ந்த மத்தியூஸ் என்பவர் (60வயது) ஸ்தலத்திலேயேபலியானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அநாதை சிறார்க்கு உணவு வழங்கினர்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி சைவ அநாதை இல்லத்திலுள்ள சிறார்களுக்கு இம்மாதம் முதலாம் திகதி திரு. என். மூத்ததம்பியின் நினைவாக திரு. ம. முத்துலிங்கம் மதிய போசனம் வழங்கினார். சைவ மகளிர் மன்றத்தினால் 6ம் திகதி இரவு உணவு வழங்கப்பட்டது. 21ம் திகதி நிர்மலா நடேசன் நினைவாக உணவு வழங்கப்பட்டது.

# கல்விக் கண்காட்சி

நெடுந்தீவு வெள்

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நெடுந்திவுப் பாடசாலைகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்விக்கண்காட்சி நடைபெற்றது.

# பரவலான கருத்துப்பரிவர்த்தனை, என்றாலும் முக்கிய அம்சங்களில் இன்னமும் கருத்துவேறுபாடு

## சென்னையில் 'அமிர்' தகவல்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை கொழும்பில் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவுடனும், சில அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் நடத்தியதில் பரவலான கருத்து பரிவர்த்தனை ஏற்பட்டிருந்தாலும், முக்கியமான அம்சங்கள் இன்னமும் கருத்து வேறுபாட்டுடனேயே உள்ளன என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு சென்னை திரும்பியதும் நிருபர்களிடம் திரு அமிர்தலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை ஒன்றாக இணைப்பது என்ற தமிழர்களின் கோரிக்கை இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கிறது.

நிலக்குடியேற்றம் குறித்து புதிய அம்சங்களை இலங்கை அரசு வழங்கியுள்ளது. சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக இலங்கை அரசு தற்போது கொடுத்துள்ள திட்டம் இந்தியமத்திய நிர்வாக சீர்திருத்தத்துறை இணை அமைச்சர் திரு. பி சிதம்பரத்திடம் முன்பு தெரிவிக்கப்பட்ட திட்டத்தைக்காட்டிலும் சிறப்புக்குரியதாகவுள்ளதென திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை அரசு தமிழ்ப் போராளிகள் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று தமது குழுவினர் வலியுறுத்திக் கூறியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடத்தியபேச்சுவார்த்தைகள் குறித்து புதுடில்லி சென்று மத்திய அரசிடம் விரிவாகத் தெரிவிக்க இருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேலும்தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'பொலிட்பீரோ' இன்று சந்தித்து பேச்சுவார்த்தைகள் குறித்து விவாதித்து அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (து)

## முதலுதவிப் பயிற்சி ஆரம்பம்

நெல்லியடி, செவ்வாய்

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த பன்னாலை சித்தியாப்புளியடி பத்தாவத்தை கோட்டைக்காடு, மத்தாலோடை, தையிட்டி ஆகிய கிராமங்களுக்கான முதலுதவிச் சிகிச்சைப்பயிற்சி, மல்லாகம் கிராமமுன்னேற்றச் சங்கமண்டபத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இங்கு நடைபெறவுள்ள முதலுதவிச் சிகிச்சை வகுப்பை மருத்துவமனை தெல்லிப்பளை மாவட்ட உதவிச் சுகாதார அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் ஆரம்பித்து வைப்பார்.

ஒருமாத காலத்துக்கு நடைபெறும் இப்பயிற்சியின் முடிவில் சித்தியடைபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

## சங்கம் அமைக்கின்றனர்

யாழ்ப்பாணம், சனி

டி.ஐ.எம்.எஸ் / டி.ஏ.எம்.எஸ் (சித்த) மருத்துவ பட்டதாரிகளுக்கான சங்கம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

கைதடியிலுள்ள யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்திற்கு முன்பாகவுள்ள கட்டிடத்தில் ஆகஸ்ட் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

சகல சித்த மருத்துவ பட்டதாரிகளும் இவ்வங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவிக்குமாறு அமைப்பாளர் டாக்டர் என். விஜேந்திரன் கோரியுள்ளார்.

## அணுகுண்டு சோதனை: அமெரிக்கா மீது சோவியத் குற்றச்சாட்டு

(லண்டன்)

அமெரிக்க நெவேடா பாலைவனத்தில் மற்றுமொரு அணுகுண்டுச் சோதனையை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுஆயுதப் போட்டியை நிறுத்துவதற்கான முயற்சிகளை சீர்குலைப்பதற்காகவே அமெரிக்க தொடர்ந்து இவ்வாறு செய்வதாக சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது. (து)

## போராளிகளின் கோரிக்கை திருப்தி செய்யப்பட வேண்டும்

(சென்னை)

இலங்கைத்தமிழ்ப்போராளிகள் இலங்கை அரசிடம் தெரிவித்துள்ள நான்கு முக்கிய அம்சங்கள் திருப்தி செய்யப்பட வேண்டுமென்று போராளிகள் குழுக்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாகதமிழர்களுக்கென்று ஒரு பிராந்தியம், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை அளிப்பது, இந்திய 'வம்சாவளி' மலையகத்தமிழர்களுக்கு வாக்குரிமைஅளிப்பது, தமிழர்களுக்கான தனித் தேசியத்தை அங்கீகரிப்பது ஆகியவை இதிலடங்குமென்றும் அவர் தெரிவித்தார். (து)

## வெலிக்கடை உண்ணாவிரதம்: 'புளொட்' அறிக்கை

யாழ்ப்பாணம் சனி

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த 23ம் திகதி புதனிரவு 7-30 மணியளவில் சிறைச்சாலையில் உள்ள 6 தமிழ் இளைஞர்கள் சிறை அதிகாரிகளினால் கோரமாகத் தாக்கப்பட்டதில் இரண்டு சிறைக்கைதிகள் மிகவும் அபாயகரமானநிலையில் கொழும்பு இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி அறிந்த சக தமிழ்க்கைதிகள் சிறையிலிருந்த வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தபோது சிறை அதிகாரிகள் அவர்களைத் துப்பாக்கிமுனையில் மிரட்டியுள்ளனர். இச்சம்பவம் பற்றி அறிந்த சிறை உயரதிகாரி ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டிக்குள் கொண்டு வந்தமையால் ஏனைய தமிழ் இளைஞர்கள் தமது கண்டனத்தை அவருக்குத் தெரிவித்து அன்றிரவு முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இளைஞர்கள் சிறைக் கதவுகளைக் கைகளினால் அடித்து உணர்ச்சி வசப்பட்டபோது. சிறை உயர் அதிகாரிகள் வான் நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதுபற்றி உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் இளைஞர் எவரும் ஆர்ப்பாட்டம் செய்தால் சுட்டுக் கொல்லப்படுவார்கள் எனவும் அச்சுறுத்தப்பட்டனர். எனினும் தமிழ் இளைஞர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கத் தவறவில்லை.

இவ்வாறு தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் [புளொட்] விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்பின மக்கள் மீது தாக்குதல்: பிரிட்டன் நாடாளுமன்றத்தில் மக்கள் அவை அறிக்கை

லண்டன், ஜூலை. 25

பிரிட்டனில் கறுப்பின மக்கள் மீதும், ஏனையவர்கள் மீதும் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் குறித்து பிரிட்டனின் நாடாளுமன்றத்தின் மக்கள் அவை உள்விவகாரக்குழு அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளது.

இப்படிப்பட்ட தாக்குதல்கள் இடம்பெறுவது சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒரு விடயமாகும் என்றும் பொலிஸ்காவல்துறையினருக்கு விசேஷ பயிற்சி வழங்கப்படவேண்டுமெனவும் இப்படிப்பட்ட தாக்குதல்கள் இடம் பெறு வண்ணம் மக்களை பாதுகாப்பது பொலிசாரின் முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் லண்டனில் மட்டும் முந்நூறுக்கு மேலான தாக்குதல்கள் நடந்ததாகவும் இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (து)

## உலகச் செய்திகள்

## கொமன்வெல்த்விளையாட்டை இளவரசர் பிலிப் தொடக்கிவைத்தார்

எடின்பரா, ஜூலை-25

எடின்பராவில் பதின்மூன்றாவது 'கொமன்வெல்த்' விளையாட்டு விழா நேற்று ஆரம்பமானது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிப்பதை ஆபிரிக்க பிரிட்டன் மறுப்புத் தெரிவித்திருப்பதை ஆட்சேபித்து 32 நாடுகள் இந்த விளையாட்டுக்களைப் பகிஷ்கரித்தமை தெரிந்ததே.

ஆயினும் கடைசி நிமிடத்தில் பிறேமுடா குழு தம் நாட்டின் பகிஷ்கார நடவடிக்கைகளையும் மீறி விளையாட்டு விழாவில் பங்கேற்பதென்று முடிவுசெய்துவிட்டது.

பிரிட்டனின் இளவரசர் பிலிப் இந்த எடின்பரா விளையாட்டைத் தொடக்கிவைத்தார். [து]

## கறுப்பின அதிகாரிகள் பிரிட்டிஷ் அமைச்சரை சந்திக்க மறுப்பு

கேப்டவுன், ஜூலை-25

ஐரோப்பிய சமூக அமைப்பின சார்பில் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஜேப்ரிகவ் அவர்கள் வர்த்தகப் பிரமுகர்கள் பலரைச் சந்தித்துப் பேசினார்

இதேவேளை தென்னாபிரிக்காவிலுள்ள கறுப்பினத் தொழிலாளர் சங்கத்தின் அதிகாரிகள் இவரைச் சந்திக்க மறுத்துவிட்டனர். [து]

## "தெவிதுவ" திரைப்படத்தை தடைசெய்க

கொழும்பு, வெள்ளி

''தெவிதுவ'' சிங்களத் திரைப்படத்தை தடைசெய்யுமாறு அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம் ஜனாதிபதிக்கும், திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இத்திரைப்படத்தில் முஸ்லிம்களை புண்படுத்தும் விதத்தில் பல அம்சங்கள் அமைந்துள்ளதாக இச்சம்மேளனம் தெரிவித்துள்ளது. (சிவ)

## முல்லை. மாவட்டத்தில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மிருகங்களால் நாசம்

ஒட்டுசுட்டான், வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில் பயிர் செய்யப்பட்ட நெல், கச்சான்: மரவெள்ளிக்கிழங்கு மற்றும் சிறுதானியப்பயிர்களை காட்டுப்பன்றிகளும் குரங்குகளும் கூட்டாக நாசமாக்கி வருகின்றன.

பயிர்ப்பாதுகாப்புக்காக அரசினரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் சென்ற 1983-ல் திருப்பி எடுக்கப் பட்டதால் மிருகங்கள் வெகுவாகக் வீடுகளுக்கும் வரக்கூடியனவாக இருக்கிறது.

இதனால் எப்பயிரையும் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள் தயங்குவதனால் இப்பகுதி உணவு உற்பத்தி குறையலாம்.

## தென்னாபிரிக்கா மீது வர்த்தகத் தடைகளைவிதிக்க நோர்வேயும் தயார்!

லண்டன், ஜூலை-25

தென்னாபிரிக்காவுடனான வர்த்தகத்தின்மீது முழு அளவிற்குத் தடை விதித்திடத் தாம் தயாராகவிருப்பதாக நோர்வே அறிவித்துள்ளது.

நோர்வே நாட்டுக் கப்பல்கள் மூலமாக அனுப்பப்படும் சர்ச்சைக்குரிய எண்ணெய் சப்ளைகளும் இதில் அடங்கும்.

இந்த ஆண்டுப் பிற்பகுதியில் சுவீடன், டென்மார்க், பின்லன்ட் மற்றும் ஐஸ்லன்ட் நாட்டுப் பிரதம மந்திரிகளைத் தாம் சந்திக்கும்போது 'நொடிக்' நாடுகளின் கூட்டான தடைவிதிப்புகள்பற்றிய பிரச்னையை எழுப்பப்போவதாகப் பிரதம மந்திரி திருமதி பிரூேகாலின் பிறங்லான் ஆஸ்லோவில் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைக்கு சித்த ஆயுர்வேத சங்கம் எதிர்ப்பு

கிளிநொச்சி, வெள்ளி

''மாகாண சபைத் திட்டம் தமிழ் மக்களுக்கு எந்தவொரு விமோசனத்தையும் தரப்போவதில்லை. மாறாகத் தமிழ் இனத்தின் போராட்டத்தை முறியடிக்கவே வழிகோலும் எனவே அனைத்துத் தமிழ் மக்களும் இம்மாகாணசபைத் திட்டத்தை எதிர்க்கவேண்டும்''.

இவ்வாறு வடபிரதேச சித்த ஆயுர்வேத வைத்திய சங்கம் மாகாணசபைத் திட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் இன்று போராட்டக்களத்தில் பல படிகளைக் கடந்து லட்சியத்தை நோக்கி முன்னேறிவரும் இவ்வேளை மாகாண சபைத் திட்டம் வேண்டாத ஒன்றாகக் கருதவேண்டியுள்ளது.

இவ்வாறு சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மணி வாக்கு

தர்க்கமிட்டுப் பாழாஞ்
சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி
நேர் பெறுவ தெந்நாளோ?

—தாயுமானவர்.

## நமது நோக்கு

### விளையாட்டும் வேதனையும்

சுன்னாகம், கொக்குவில், எடின்பரோ போன்ற சின்ன, பெரிய இடங்களில் விளையாட்டு வேதனையளிக்கும் காட்சியாகவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தை நோக்குங்கால் சுமார் அறுபது வருடங்களுக்கு முன் முற்றவெளியில் நடைபெற்ற பாடசாலை உதைபந்தாட்டப் போட்டியைப் போல் சுவையானதை நாம் இதுவரையும் காணவில்லை. இந்த இலவசக் காட்சியில் பார்வையாளரின் நேரடி வர்ணனை இன்றும் காதில் ஒலிக்கின்றது.

''பாரடா! பிறைசூடி பந்தை ஆகாயத்திலிருந்து நூல்கட்டி இறக்கும் சிறப்பை!'' என்பது ஒரு ரிக்ஷா இழுப்பவரின் புலமை என்றால் விளையாட்டின் இன்பம் இருந்தவாறென்னே!

அக்காலத்தில் விளையாட்டு விதானங்கள் மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே இடைவேளைக்குப் பின் பொதுவாக விளையாட்டில் ஒவ்வொரு பக்கத்திலும் பதினொரு பேருக்கு மேல் காணப்படுவது சாதாரணம். பார்வையாளர் ஆவேசத்தில் பங்கு பற்றுவதை யார் பரவாய்ப் படுத்தினர்? இருந்தும் மோதல்கள் இடைக்கிடை இடம் பெற்றன.

இன்று மிக நுணுக்கமான விதிகளுக்கமைந்த இந்த விளையாட்டு இவ்வளவு தூரம் முன்னேறியபோதும், பிரிட்டனைப்போல், சீனாவைப்போல், மத்திய அமெரிக்காவைப் போல், சுன்னாகத்திலும், கொக்குவிலிலும் பாடசாலைப்போட்டி விளையாட்டுகள் குழப்பத்தில் முடிவதை இக்காலத்தின் கோலமெனலாமா?

தமிழர் பிரச்னையே ஒரு உதைபந்தாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் இவ்வேளையில், நாம் இங்கு கட்டுப்பாடில்லாத மக்களைப்போல பாடசாலை மைதானங்களில் எப்பவோ கைவிடப்பட்ட உள்நாட்டுச் சண்டித்தனத்தை மீண்டும் உயிர்ப்பிக்கலாமா? அதுவும் இந்த வேளையிலா?

விளையாட்டுக்கும் கல்விக்குமுள்ள தொடர்பு போன்றதே விளையாட்டுக்கும் அரசியலுக்கும் உண்டான தொடர்பு. பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கு விளையாட்டு பெரிதும் இன்றியமையாததென்பதை இன்றைய கல்வி உலகம் உறுதிப்படுத்துகிறது. அது உண்மையானால் ஒரு நாட்டின் அரசியல், அந்த நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யும் விளையாட்டுக் கோஷ்டியில் பிரதிபலிக்கிறது பிரிக்கமுடியாத இரு பண்டங்கள் இவை.

தமது அரசின் கட்டளையை மீறி இன்று எடின்பரோ விளையாட்டில் அந்நாட்டின் விளையாட்டுக்கோஷ்டி பங்கு பற்றுவதாகச்செய்தி குறிக்கிறது. இன்று எடின்பரோ விளையாட்டை 49 பொதுநல நாடுகளில் 32 பகிஷ்கரித்துள்ளன. இந்தப் பகிஷ்கரிப்பைப் பொருட்படுத்தாமல் அரசின் கட்டளைக்கு மதிப்பளியாது பங்குபற்றும் விளையாட்டு வீரர்கள் ''அரசியலுக்கும் விளையாட்டுக்கும் என்ன தொடர்பு'' என்ற குதர்க்கத்தை எழுப்பலாம்.

ஆனால் பங்குபற்றும் சில விருத்தியடைந்த நாடுகள் இவ்வாறு வாதிப்பதே மிக வேதனைக்குரியது. எங்கள் நாட்டின் நல்ல காலம். நாம் பங்குபற்றச் சங்கணம் கட்டிக்கொண்டிருந்த போதும், இறுதியில் இதனைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தது பாராட்டுக்குரியது.

உலகத்தோடு பொருந்துப்படி ஒழுகி வாழவேண்டும். அப்படி வாழக்கற்றுக் கொள்ளாதவர்கள், ஒழுகாதவர்கள் அதிகம் கற்றும் அறிவில்லாதவர்கள் என்ற திருவள்ளுவரின் வாக்கை இலங்கை இறுக்கிப்பிடிக்கிறது போலத் தெரிகிறது.

அது எவ்வாறாயினும் எடின்பரோ பொதுநலநாடுகளின் விளையாட்டு அலங்காரம் மங்கவிவிட்டது. இன்றைய அரச திருமண அமர்த்தறையில் அது தெரியவராது. அதனை ஆரம்பித்து வைத்த எடின்பரோ கோமகன் பிலிப், தமது மனைவி எலிஸபெத் மகாராணியின் கவலையைப் பிரதிபலிக்கும் நடிகராகவே தோற்றமளித்திருப்பார்.

அரசியலுக்கும் விளையாட்டுக்குமுண்டான தொடர்பு மிகப் பாரியமானதை 32 பொதுநல நாடுகள் நன்றாக உணர்கின்றன.

தென்னாபிரிக்காவின் இனவெறி ஆட்சி அந்நாட்டின் மக்களை வதைப்பதற்கு பொதுநல நாடுகள் அமைப்பு ஏகோபித்த பொருளாதாரத்தடை விதிக்கவேண்டுமென்று ஒரே குரல் எழுப்ப அதற்குத் தலைமை தாங்கவேண்டிய தாட்சரின் பிரிட்டன் தனித்து நின்று தடைசெய்கிறது. பிரிட்டிஷ் மக்களினது மட்டுமல்ல உலகின் பொதுஜன அபிப்பிராயம் இவ்வித கண்டனத்தை ஆபிரிக்க ஆட்சிக்குரியதென்று கொள்கிறது.

அமெரிக்காவும் பிரிட்டனும் இதனை விடாப்பிடியாக எதிர்ப்பதன் காரணம் யாது? தத்தம் நாடுகளின் வர்த்தகம், முதலீடு, பொருளாதாரம் தாக்கமடையுமென்பது தெளிவாயிருந்த போதும், உலகத்தை ஏமாற்றும் விதத்தில் அத்தகைய நடவடிக்கை ஆபிரிக்கக் கறுப்பர்களையே பாதிக்கும்'' என்ற நொண்டிச் சாட்டை முன்வைக்கின்றன.

ஆடு மழையில் நனைந்த போது ஓநாய் குந்திக் கொண்டழுத கதை நினைவுக்கு வருகின்றது.

எந்தத் தாக்கத்தையும் ஏற்கத் தயார் என்ற கறுப்பர்களுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் வெள்ளையர் ஆட்சிப் பக்கம் நிற்பது தெட்டத்தெளிவு. கறுப்பர் வெற்றியடைவர் என்பதைக் காலம் காட்டும்.

அடிமைத்தனத்தை அகற்ற அமெரிக்காவும் பிரிட்டனும் பல பெரும் சாதனைகள் இயற்றின என்பது அந்தக் காலம்.

இனிவரும் உலகம் எவ்வாறமையுமென்பது இவ்விருவருக்கும் இன்று எட்டாத விடயமாகிறது.

## 'அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே....'

# சிங்கள மன்னர் சபைகளில் ஆட்சி புரிந்தது தமிழே!

பேட்டை என்பது ஒரு தமிழ்ப்பதமாகும். அதுவே ''பெற்ரு'' என மருவி வழங்குகின்றது. கோட்டை என்பதும் அவ்வாறு. அதுவே கொட்டுவா என்று திரிந்து போயிற்று.

இன்றைய கோட்டை ஜெயவர்த்தனபுரத்தில் ஆட்சிமொழி சிங்களம். ஆனால் இலங்கையைப் பிரிட்டிஸார் கைப்பற்றும் வரை அரசுமொழி தமிழாகவே இருந்தது எனலாம். இதற்குச் சரித்திரச் சான்றுகள் பல உண்டு. இலங்கையின் ஆதிகால வரலாற்றினில் சிங்களமொழி அதிகளவாக வளர்ச்சியடைந்து இருக்கவில்லை. இதனால் மன்னர்கள் யாவரும் தமிழ் மொழியை விருத்தி செய்வதில்தான் தமது நிர்வாகம் சீர்பெறும் எனக் கருதினர்கள்.

**ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தை ராஜதானியாகக் கொண்டு**

**ஆண்ட மன்னர்களில் தமிழ்க் கலப்பில்லாத**

**மன்னனொருவனைக் காண்பது அரிது.**

**6-வது பராக்கிரமபாகு முதல் தர்மபாலா வரை**

**இதே கதைதான்!**

இளவரசன் விஜயபாலாவும் இரண்டாவது இராஜசிங்கவும் எழுதிய கடிதங்கள் யாவும் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. போர்த்துக்கேய வரலாற்று ஆவணங்கள் தர்மபாலாவைப் பெரிய பண்டாரம் என்று குறிப்பிடுகின்றனவே தவிர மஹா பண்டாரம் என்றுகுறிப்பிடவில்லை.

### வரலாறு பகரும் உண்மைகள்

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் தமிழில் பலருடன் கொண்ட தொடர்புகள் யாவும் தமிழ் மொழியிலேயே உள்ளன. இக்கடிதங்களின் உண்மை தகவல்களை நுவரேலியாவில் உள்ள நூதனசாலையில் காணலாம். பிரெஞ்சு மன்னன் 16வது லூயிக்கும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுக்கும் இடையே 1777ம் ஆண்டில் ஒரு நட்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கை சிங்கள மொழியிலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ எழுதப்படடதல்ல. அது தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. நீங்கள் ஆச்சரியப்படலாம்; ஆனால் வரலாற்றினை மூடி மறைப்பது என்பது மிகவும் கஷ்டமான ஒன்றுதான்! இந்த உடன்படிக்கையின் மூலப்பிரதிகள் பாண்டிச்சேரியில் உள்ள தொல்பொருட்காட்சிச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில தமிழ் ஆட்சிமொழியின் இடத்தை வகித்தது என்பதற்கு இதைவிட அதிக வரலாற்று ஆவணங்கள் தேவையென்பது மிகைப்பட்ட கூற்றே.

சிங்கள மக்களின் கலை இலக்கியத்திற்கு அன்று ஆட்சி மொழியாக இருந்த தமிழ் மொழியில் இருந்தே இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டன என்று வரலாற்று ஆசிரியர் டபிள்யூ. ஏ. டி. சில்வா எழுதியுள்ளார். ராமாயணம், அரிச்சந்திரா என்ற புராண இதிகாசங்கள் சிங்கள மக்களின் விருப்பத்திற்கு அமையவே சிங்களமொழியில் பெயர்க்கப்பட்டன. கண்ணகியை வழிபடும் தெய்வமாகச் சிங்கள மக்கள் ஏற்று உள்ளனர். தமிழ் இலக்கியங்களில் இருந்து உயர்ந்த ஒழுக்கக்கட்டுப்பாடான கற்புநெறியை அவர்கள் ஏற்கப்பழகியமையே இந்தத் தெய்வ வழிபாட்டின் அடிப்படையாகும்.

மூன்றாவது பராக்கிரமபாகுவின் அரண்மனை தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்கட்கு முன்னுரிமை வழங்கியது. அவருடைய அரண்மனையில் இருந்த போதிராஜா என்பவரால் தான் சரஜோதிமாலை தமிழில் பாடப்பட்டது. பின்பே அது சிங்களமொழிக்குப் பெயர்க்கப்பட்டது.

### பௌத்தமும் தமிழும்

இன்றைய பௌத்தம் சிங்களமொழியினை அங்கீகரித்து உள்ளது.

ஒரு மதத்திற்கு ஒருமொழி எனக்கொள்வது குறுகிய இனவாதமே. சைவமும் தமிழும் ஒன்று என ஒருகாலத்தில் வாதிடட்பட்டது. ஆனால் அது ஒன்று அல்ல, அது பிழையானது என ஆறுமுகநாவலர் கூட வாதாடத் தயங்கவில்லை.

பௌத்தம் இலங்கையில் பரப்பப்பட்டமைக்கு அன்று முக்கிய மொழியாக இருந்த தமிழே காரணம். அன்று பௌத்த சந்நியாசிகள் தமிழ மொழியிலேயே உபதேசம் செய்தனர். இலங்கையில் வோகாரீகதிசனின் ஆட்சிக் காலத்தில் [கி. பி. 169-291] அபயகிரி விகாரையில தமிழ் மொழியிலே மதம் பரப்பும் தொண்டுகள் தொடர்ந்தன

ஆயினும் அடுத்து வந்த கோதாபயனின் ஆட்சிக்காலத்திலே அங்கிருந்த இலக்கியங்கள் யாவும் எரிக்கப்பட்டு அங்கிருந்த 60 சந்நியாசிகளும் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டனர்.

### தமிழ்த்துறவி சங்கமித்தை

சங்கமித்தை வந்த காரணம் முதலில் பௌத்தத்தைப் பரப்புவது மட்டுமல்ல; நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட அந்த அறுபது சன்னியாசிகளின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்குத்தான்!

சங்கமித்தை தமிழ்பேசிய ஒரு தமிழ் பௌத்தத் துறவியே. இவ்வாறு மகாவம்சமும் ஒத்துக்கொள்கின்றது. [மகாவம்சம் கைகர். அத்தியாயம் XXXVI. V113] அத்துடன் அவள் சோழநாட்டுக்கு உரியவளே என்பதையும் இதே மகாவம்சம் மறுக்கவில்லை.

**திக்கவயல் [redacted]**

இலங்கைக்குவந்த சங்கமித்தை கோதாபய மன்னனின் பிள்ளைகளான ஜெததிசனுக்கும், மகாசேனனுக்கும் ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். கோதாபயனின் இறப்பிற்குப் பின்பு (கி. பி. 323-333) ஜெததிசன் அரசாண்டான். அவன் அரசாண்ட போது சங்கமித்தை இங்கு இருக்கவில்லை. பின்பு மகாசேனன் அரசனானபோது சங்கமித்தை பௌத்தத்தைப் பரப்புவதில் அரசனால் அங்கீகரிக்கப்பட்டாள்.

சங்கமித்தை காலத்தில் போதிதர்மர் என்ற தமிழ் பௌத்த சந்நியாசி வாழ்ந்தார் இவர் கி. பி. 520ல் சீனாவிற்கு [கன்ரன் நகருக்கு] வந்து சேர்ந்தார். இவர் காட்டிய வழியைப் பின்பற்றியோர் சௌ குழுவினர் ராமோ என்றே இவரைச் சீனர்கள் அழைத்தனர். இன்றும் சீனாவில் முக்கியமாகக் குறிப்பிடப்படும் 25 சமயகுருவானவர்களில் தாமோ எனப்படும் இந்தத் தமிழரும் அடங்குவார்.

### நீதிமன்றத்தில் தமிழ்மொழி

வடக்கிற்கும் - கிழக்கிற்கும் வெளியே புதைபொருளாராச்சியாளர்களால் தமிழ் மொழியில் பெருந்தொகை

(7ம் பக்கம் பார்க்க)

## கலையின் தரிசனம்

அன்னையைப் பிரிந்தழுஞ் சேயாய்
ஈழதமிழ் நாடக முந்தான்
தன்னையே நோகுமவ் வேளை
தோள்கொடுத்து உயிர ளித்தாய்
உன்னுரு வேயருங் கலையின்
எல்லையிலாத் தரிசனம் குன்றாய்ப்
பொன்னையள் ளிக்குவித் தாலும்
போதுமோவுன் புகழுக் கீடோ.

★

பூவுடன் குலவுந் தென்றல்
பொலியுங்க லைக்கா நின்று
கூவிடுங் கோகிலம் நீயே!
கூனிபர தனைமறப் போமோ
சாவுடன் பொருதி வென்ற
சொர்ணலிங்கப் பெரியோய்! பாரில்
மூவகைக் காலமுங் கண்டுன்
மூத்தகலைத் தொண்டு வாழும்.

- பாஷையூர் வே. சிங்கராயர்

★ இன்று கலையரசு சொர்ணலிங்கம் நினைவு தினம்.

எமது கஷ்டங்களை

# சமயப் பெரியார்கள் மூலம் தீர்ப்பது இன்றியமையாதது!

### — உதவி அரச அதிபர்

சாவகச்சேரி, வெள்ளி இன்று தென்மராட்சி மிகவும் முக்கியமான கைங்கரியம் ஒன்றினை தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றம் அமைதி சமாதானம் கருதி நிறைவேற்றியுள்ளது. சைவ சமயத்திற் காலத்திற்குக் காலம் பெரியவர்கள் தோன்றி ஒப்பரிய சேவைகளை செய்துள்ளனர் மனித உடலில் நோய் ஏற்பட்டதும் நாம் வைத்தியரை நாடுகின்றோம். உள்ளத்தில் நோய் ஏற்படுகின்றபோது அவற்றினை மாற்றிக்கொள்ள இறைவனை நாடுகின்றோம், அதேபோல சமுதாயத்திற்கு அபாயம் ஏற்பட்டிருக்கும் காலகட்டத்தில் நாம் எமது கஷ்டங்களை இறைவனின் செல்வாக்குப் பெற்ற சமயப் பெரியார்கள் மூலம் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண்பது மிகவும் இன்றியமையாதது.

இவ்வாறு சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா கோவில்குடியிருப்பு முதலிச்சிசந்தன புரம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற திருத்தல பாதையாத்திரை நிறைவு விழா வைபவத்தில் தலைமைதாங்கி உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் இம்மாதம் 11ம் திகதி ஆரம்பமான திருத்தலப்பாதை யாத்திரை நிகழ்ச்சி 23ம் திகதி புதன்கிழமை கோவில் குடியிருப்புப் ஆலயத்தில் நிறைவு பெற்றது

உதவி அரசாங்க அதிபர் துரைராஜா மேலும் தொடர்ந்து அங்கு பேசுகையில்:-

தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தல பாதயாத்திரை நிகழ்ச்சிகளை யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நடாத்தி அப்பகுதி மக்களின் மனதிலும் அமைதி சமாதானம் நிலவச் செய்ய வேண்டும் எனவும் இவ் விடயம் தொடர்பாகத் தான் ஏனைய அரசாங்க அதிபர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகள் எடுக்க இருக்கின்றேன். என்றும் கூறினார்.

அடுத்து ஆசிரியர் சிவமகாலிங்கம் அங்குபேசுகையில் ஆத்மஜோதி நா. முத்தையாவின் பெறமதிமிக்க சமயப் பணிகளால் இன்று சைவ உலகம் பெருமை கொள்கிறதெனவும் இன்று இருக்கின்ற அவல நிலைகளைப்போக்க இவ்வாறான திருத்தல யாத்திரைகள் தான் ஒரே சிறந்த வழியாகும் என் கூறினார்

இதனையடுத்து ஆகிரியமணி திரு. ஆர். டி. சுப்பிரமணியம் தனது உரையின்போது ஆத்மீக வள்ளலின் அரிய அறிவையும் உரிய அனுபவத்தையும் தென்மராட்சி சரியான முறையில் உபயோகிப்பது திருப்தியாக இருக்கிறது என்றார்.

மற்றும்பல சமயப் பெரியார்கள் இவ் விழாவில் பங்கு கொண்டு உரையாற்றினர்.

## சம்பளம்பெறுவதில் சிரமம்

ஊர்காவற்றுறை, வெள்

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடமை பார்க்கும் ஆசிரியர்கள் தங்கள் மாதாந்தச் சம்பளத்தை பெறுவதில் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளனர்

ஆனி மாதம் கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்ட காசோலைகள் சில திரும்பியதையிட்டு. ஆடி மாதக் காசோலைகளை மாற்றிக் கொடுப்பதற்கு. கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் ஸ்தாபனங்கள் மறுத்து வருகின்றன.

உரிய காலங்களில் கல்வித் திணைக்களம் வங்கிக்கு அனுப்ப வேண்டிய பத்திரங்களை அனுப்பியிருந்தால் இப்படியான கஷ்டங்கள் தங்களுக்கு நேராது என ஆசிரியர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.


அவுஸ்திரேலியா, டென்மார்க்
நேரடிப் பிரயாணம் (கொழும்பிலிருந்து)

லிபியா பிரயாண ஒழுங்குகள்

தச்சுவேலை (CARPENTER), மேசன் MASON)
இலெக்ரீசன் (ELECTRICION)
கூலியாட்கள் (LABOURERS)

ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. ஞாயிற்றுக்கிழமை கொழும்பு செல்லவேண்டும். உடனடியாகத் தொடர்புகொள்ளவும்,

விதானையின் நற்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், 7 படம், பாஸ்போட் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்:

**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**
125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 1011)



GESTETNER

வடபகுதியின் (GESTETNER) ஜெஸ்ரெட்னர் ஏஜென்சிகளாக நாமே நியமிக்கப்பட்டுள்ளோம்.

அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு மட்டுமல்ல,

* றோனியோ மெசின்களும் பல தினுசுகள் * போட்டோ ஸ்ரட் (Gestetner) இயந்திரங்களையும் நாமே தருவித்துத்தருவோம்.
* டுப்ளிக்கேட்டிங் 8 x 13 * டுப்ளிக்கேட்டிங் இங்
* போட்டோஸ்ரட் பேப்பர்கள் அளவுகள்: A/5-A/4-B/4-B/5-F/C லீகல் சைஸ்
* கறசன் புளுயிட் அனைத்தும் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். குடாநாட்டில் அச்சகப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் இறக்குமதி செய்தோ, நேரடி விநியோகம் மூலமோ நாமே வழங்கி வருகின்றோம்.

**அம்பலவாணர் அன் சன்ஸ்,**
(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளும், மின்சார உபகரண இறக்குமதியாளரும்.)
196, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291
தந்தி: "வாணர் சன்ஸ்"
(A 1008)



எம்மிடம் குவைத் செல்வதற்கு பாஸ்போட் தந்தவர்களுக்கு விசா வந்துள்ளது. கீழ்க் குறிப்பிடும் நபர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பெயர்: | பாஸ்போட் இல. |
|---|---|
| 1. V. T. ராதா | H 0085410 |
| 2. A. குணசீலன் | H 0477799 |
| 3 A ஞானசேகரம் | F 121963 |
| 4. S. ரவிச்சந்திரன் | H 0216914 |
| 5. T விஜயகுமார் | F 255991 |
| 6. R அமிர்தலிங்கம் | H 0254287 |
| 7. S. மோகனராஜ் | H 0100925 |
| 8 K N இந்திரன | H 0354027 |
| 9 V சுப்பிரமணியம் | H 0402692 |
| 10 M மகேஸ்வரன் | H 0356331 |
| 11 N. சிறீரங்கநாதன் | H 0418650 |
| 12 A உதயகுமார் | H 0483341 |
| 13. S T. ராஜ்குமார் | H 0369798 |
| 14 K. V செல்வவீரசிங்கம் | H 0072975 |
| 15 S தர்மராஜா | H 0480600 |
| 16 S நற்தசுதன் | H 0312174 |
| 17 N ஜெயசீலன் | H 0321797 |
| 18 S R. பிரபாகரன் | H 0443701 |
| 19 K சந்திரசேகரம் | H 0385161 |
| 20 K A. ஆனந்தராஜா | H 0240976 |
| 21 P நடராஜா | H 0055205 |
| 22 K ரட்ணசிங்கம் | H 0102892 |
| 23 S. ராஜேஸ்வரன் | H 0395484 |
| 24. V. தியாகநாயகலிங்கம் | H 0215936 |
| 25 T. சந்திரகுமார் | H 0349045 |
| 26 K. A சிவராஜா | H 0[illegible]74044 |
| 27. G. T தாமரைமணாளன் | H 0460039 |
| 28 A C. அருள்தாஸ் | H 0281546 |
| 29. S. இந்திரராஜா | H 0320080 |
| 30. J. A. வலன்டீன் | G 0341780 |
| 31. J F பெர்னாண்டோ | H 0291184 |
| 32 T. S சிவதாசன் | H 0281339 |
| 33 R. சேகர் | H 0419775 |
| 34. S செல்வராஜா | H 0474625 |
| 35. V. S சேனாதி | H 0244462 |
| 36 E P மாணிக்கம் | H 0435145 |
| 37. A K கருணன் | H 0239180 |
| 38. V. T சுருணலிங்கம் | H 0311377 |
| 39. N M சூரியகுமார் | H 0313554 |
| 40. H A ரொபேட் | H 0267229 |
| 41. S. ஏகாம்பரநாதன் | H 0465630 |
| 42 S P தவராஜா | H 0328045 |
| 43. A. மகிபாலா | H 0356157 |
| 44. A K. சிவபாலன் | H 03[illegible]2607 |
| 45. P. E சந்திரன் | H 0342781 |
| 46. A. M. மேரு | H 0483326 |
| 47. S. குழந்தவேல் | H 0310680 |
| 48. T. செல்லன் | H 0347126 |
| 49. A P. அமரசிங்க | H 0128040 |
| 50. B. குணேந்திரலிங்கம் | J 0009842 |
| 51. K. செல்வநாயகம் | H 0325412 |
| 52. T. T. மகேஸ்வரன் | H 0310929 |
| 53. S சிறீஸ்கந்தவேல் | H 0074941 |
| 54. K. T. ஜெயரட்ணம் | H 0064813 |
| 55. M. மகாலிங்கம் | H 031384 |
| 56. P. விஜயபவன் | H 0260185 |
| 57. K. தவலிங்கம் | H 0285169 |
| 58. K. ரவீந்திரன் | H 0324689 |
| 59. P. S. தேவராசன் | H 0106813 |
| 60. S V. கேதீஸ்வரன் | H 0105358 |
| 61. S. V. குமரன் | J 0027119 |
| 62. P. கிருஷ்ணமூர்த்தி | H 0296768 |
| 63. S S ராஜலிங்கம் | H 0386676 |
| 64. P. மகேந்திரன் | G 0172911 |
| 65. P. உதயகுமார் | G 0085639 |
| 66 P விஜயபாஸ்கரதாசன் | J 0000871 |
| 67. T. விஜயகுமார் | H 03729[illegible]4 |
| 68. S. விக்கினேஸ்வரன் | H 0375914 |
| 69. T. I வரதராசா | G 0400405 |
| 70. V. R. லோகநாதன் | G 0461485 |
| 71. N. S. ஆனந்தராஜா | G 0343457 |
| 72 S தெய்வேந்திரா | H 0154005 |
| 73. V. K S. குலதேவசிங்கம் | H 0405754 |
| 74. P. குணேந்திரன் | E 181911 |
| 75. N. P. யோகராஜா | H 0205207 |
| 76. C. C. பிரான்சிஸ் | H 0287986 |
| 77. S. ஞானசேகரன் | H 0306655 |
| 78. K. N சண்முகநாதன் | H 0198135 |
| 79. S. சுதாகரன் | H 0358066 |

**யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(பெற்ரோலியம் கூட்டுத்தாபன முன்பாக,
ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)
(A 1010)

# இடம்பெயர்ந்த க.பொ.த. (உ) மாணவர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், சனி

வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் தங்கியிருந்து எதிர்வரும் க. பொ. த. உயர்தர பரீட்சை எழுதவிருக்கும் பரீட்சார்த்திகளின் திரிசங்கு சொர்க்க நிலைபற்றி பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

அவரை நேற்று முன்தினம் பருத்தித்துறைமத்திய பிரஜைகள் குழு பேட்டிகண்டு இப்தப் பரீட்சார்த்திகள் நிலைபற்றி ஆராய்ந்தபின்னர் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஒரு விசேட பரீட்சை மண்டபம் ஒழுங்கு செய்யப்படும். இங்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளும், பிரத்தியேக பரீட்சார்த்திகளும் பரீசை எழுதலாம். இவர்கள் பரீட்சை ஆணையாளரால் வழங்கப்பெற்ற அனுமதி அட்டை அல்லது தற்சமயம் பயிலும் கல்விக்கூட அதிபரின் கடிதம் கொண்டு சென்றுலே பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர். அனுமதிஅட்டையோ அன்றி கல்விக்கூட அதிபரின் கடிதமோ ன்றிச் செல்பவர்களும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். ஆனல் அனுமதி அட்டையோ அன்றி கல்விக்கூடஅதிபரின் கடிதமோ சமர்ப்பிக்கப்படாத வரையில் அவர்கள் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டா

இந்த வெளிமாவட்டங்கள் என்ற பிரிவில் கிளிநொச்சி அடங்காது கிளிநொச்சிப்பரீட்சார்த்திகளுக்கு பளையில் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை மாணவரா பிரத்தியேக மாணவரா என்பதைத் தெளிவாக தங்கள் விண்ணப்பத்தில் எழுதவேண்டும். யாழ் கல்விப் பணிப்பாளருக்கு ஒருவிண்ணப்பம் எழுதி எங்கிருந்து ஏன் இடம் பெயர்ந்தார் என்பதை தெரிவித்து, தான் எடுக்கும் பாடங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த விண்ணப்பங்கள் தாம் இப்போ வாழும்பகுதி பிரஜைகள் குழுக்களிடம் 27-7-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு முன்பு ஒப்படைக்கப்படவேண்டும்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தூதுக்குழுவின் தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம், துணைத் தலைவர் வே. ச. தேவதாசன், துணைச்செயலாளர், இ. விஜயரத்தினம் ஆகியோர் இடம்பெற்றனர்.

இந்த விஷயத்தில் பூரண ஒத்துழைப்புத் தந்து ஒத்துழைக்குமபடி எல்லா பிரஜைகள் குழுக்களையும், யாழ். கல்விப் பணிப்பாளர் வேண்டுகின்ருர்.

## திருமறை இல்லம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், சனி

'திருமறை இல்லம்' திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை நடை பெறவுள்ளது.

தெ இநதியதிருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தினுல் அமைக்கப்பட்டுள்ள இவ்வில்லத்தை அத்தியட்சகர் வண டி. ஜே. அம்பலவாணர் திறந்து வைப்பார்.

## 150 புதிய பஸ்கள்

கொழும்பு, வெள்ளி

இலங்கை போக்கு வரத்துச் சபை பாகிஸ்தானிடமிருந்து சுமார் 150 புதிய பஸ்கள் கொள்வனவு செய்யவுள்ளது.

இதற்கென போக்குவரத்து அமைச்சர் எம். எச். மொகமட் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓர் குழு பாகிஸ்தான் சென்றுள்ளது.

தற்போது நாட்டில் சேவையிலீடுபடுத்துவதற்கு சுமார் 1,500 புதிய பஸ்கள் தேவைப்படுகின்றதென அமைச்சர் கூறியுள்ளார்.

## இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 10 (1986-7-26)
கிழமை: சனி
திதி: பஞ்சமி மு. ப. வரை
நக்ஷத்திரம்: உத்தரட்டாதி பி இ. வரை

மேடம்: குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்.

இடபம்: எதிலும் அவசர போக்கை கடைப்பிடிப்பீர்கள். சகோதரசுகக்குறைவும் உண்டு.

மிதுனம்: நன்மையான திருப்பங்கள் ஏற்படும் திறமையின்மூலம் புதிய தொழிலுக்கான வாய்ப்பும் கிடைக்கும். தாய்வழிமூலம் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

கடகம்: வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு. உள்ளத்திலும் உவகை துள்ளும்.

சிங்கம்: அந்நிய வாசம் அமைதிக்கும் உலைவைக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் அவதானம்.

கன்னி: குடும்பவழிச்சுகத்திற்கும் குறிக்கோள் நிவர்த்திக்கும் இடமுண்டு. காதலர்களுக்கு கற்கண்டானதினம்.

துலாம்: எண்ணியகாரியத்தில் தடைக்கும் எதிர்பாராத விபத்துக்கும் இடமுண்டு. ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: புண்ணியகாரியங்களில் ஈடுபாடு ஏற்படும். பிதாவழிச் சுகமும் பெரியோர் உதவியும் உண்டு,

தனுசு: தொழில்முன்னேற்றத்திற்கு இடமுண்டு கொடுக்கல் வாங்கல் பிணக்கும் ஏற்படும். இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்

மகரம்: புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடம் உண்டு. விருந்தினர் வருகைக்கும் இடம் உண்டு.

கும்பம்; பிரயாணத்தில் பொருள் நடுவக்கூடும் திருடர் பயத்திற்கும் இடமுண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கை நன்று.

மீனம் விரக்தி நிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல் நலமும்சிறிது பாதிக்கப்படலாம்.

திருமலை வே. இரவீந்திரன்

### 3-வது ஆண்டு நினைவஞ்சலி




நீ. பிரான்சீஸ் பரேகரதாஸ் (பொன்ராசா)
அன்னைமடியில்: 29-10-1961
அரக்கர் பிடியில்: 26-07-1983

மறந்திடலாமோ உன் புன்னகை முகத்தை மறக்கவே செய்தார் அரக்கர் கூட்டம். மனங்களோ நித்தம் நித்தம் மறக்கமுடியாமலே துடித்திடும் அகத்தை பொன்ராசா நீ அறிந்திடாயோ? அன்னரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் 26-07-86 சனிக்கிழமை பி. ப. 5-00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவரின் பிரிவால் என்றும் துயருறும்,

அப்பா, அம்மா, தம்பி, தங்கையர், மைத்துனர், உற்ருர் உறவினர்.
பலாலி வடக்கு,
வசாவிளான்.
[C 3671]

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
க. தருமகுலசிங்கம்
[ஜெயம்]
ஆண்டவன் படைப்பு: 07-09-1953
ஆள்பவன் பறிப்பு: 25-07-1983

மூன்ருண்டு போனலும் முத்தான உன் நினைவு எமைவிட்டுப் போகாது என்றுமே அகலாது சான்ருேனய் வாழ்ந்த உன்னை சிறுமதியோர் சிதைத்தாலும் எம்மனதில் என்றும் நீ முழுநிலவாய் வீற்றிருப்பாய்

அன்புடன் நினைவுகூரும்: அம்மா, அக்கா, சகோதரர்கள், பெருமக்கள், மருமக்கள், நணபர்கள்.
சாளம்பை,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.
[C-5660]

### 41ம் நாள் நினைவு



செல்வி டிலானி ஞானநந்தம்
ஆணடவன் படைப்பு: 25-05-1983
ஆள்பவன் அழிப்பு: 16-06-1986

தாலாட்டி, சீராட்டி நாம் வளர்த்த முத்தே அன்போடு அமுதூட்டி நாம் அணைத்த கண்ணே பூத்து குலுங்குவதை பார்க்க நாம் இருந்தோம் அரும்பிலே அரக்கர்கள் அழித்தனரோ உன்னை.

கனவு பல கண்டோம் உன் வாழ்வு பற்றி- இப்போ கனவிலே தினமும் உனைக் காணுகின்ருேம். மழலை மொழி கேட்க ஏங்குகின்ருேம்- நாங்கள் மண்ணில் உள்ள வரை உன் நினைவு மறவோம்.

பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, தம்பி, பேத்திமார், மாமன்மார், மாமிமார், மைத்துனர்கள், மச்சாள்மார், பெரிய தந்தை, பெரியதாய், சகோதரர்கள், உறவினர்கள்.
மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ்,
மயிலிட்டி.
[C 3676]

### இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்:
நா. மோகனராஜா
(கொழும்பான்)
மலர்வு: 26-07-1964
உதிர்வு: 12-08- 984
(திதி: 22-07-1986ல் நடைபெற்றது)

அன்புருவே மோகனராஜா ஈராண்டாகஅனல் மொழுகாய் உருகிமனம் கரைகின்ருேம் நாம் என் புடலை மறைத்திட்டாய் ஆனல் எங்கள் இதயத்தின் கோயிலேலிஎன்றும் வாழ்வாய் இன்னுயிரே இறைவனின் மலர்த் தாள மீது ஈடரியபேரின்ப சுகத்தில்வாழ்க.

உமது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும், நாகலிங்கம் (அரசாங்க அச்சகம்), தங்கரத்தினம் (பெற்ருர்), சுசிலாதேவி, தேவராஜா (சுவிற்சலாந்து), சாந்தினிதேவி (சுவிற்சலாந்து), ரஞ்சினிதேவி, விஜேதினிதேவி (சகோதரர்கள்), சசீதா, ரபீதா (மருமக்கள்), உறவினர், நண்பர்.
ஊரெழு கிழக்கு,
சுன்னுகம். (C3709)


## பிரயாண ஒழுங்குகள்

✶ கனடா ✶ ஜெர்மனி
✶ பிரான்ஸ் ✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND)
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.
(A-787)



## பிரயாண ஒழுங்குகள்

✶ டென்மார்க் ✶ ஜேர்மனி
✶ பிரான்ஸ் ✶ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்
நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிருர்கள்.
உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்
டிரைவர்[Driver], பணிப்பெண்

சவுதி அரேபியா
கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்.
அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

Group Atlantic Travels
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]
V. M Balasingam
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD.
WELLAWATTE. COLOMBO-6.
T. P. 583916 A 1004

# "தமிழ் மக்கள் உள்ளூர் உற்பத்திகளை பாவிக்கவேண்டும்"

## — முதியோர் கல்வி அதிகாரி

சாவகச்சேரி, வெள்ளி

''தமிழ் மக்கள் மத்தியில் தேசாபிமானம் வளர வேண்டும். தமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பாவிக்கத் தமிழ் மக்கள் திடசங்கற்பம் பூண முன் வருதல் வேண்டும். வெளிநாடுகள் முன்னேறுவதற்குக் காரணம் அவர்கள் தத் தமது நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களையே பாவித்து வருவது தான்.''

இவ்வாறு யாழ் மாவட்ட சென். ஜோன்ஸ் படைப் பிரிவின் ஆணையாளரும், முதியோர் கல்வி அதிகாரியுமான திரு. சீ எஸ். சுப்பிரமணியர், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் அறவழிப் போராட்டக் குழுவின் முதலுதவிப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதல் உதவிச் சிகிச்சை பற்றிய வகுப்பினை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

### அராலித் துறையில்

# பிரயாணிகள் தங்குமடம் அமைக்க நடவடிக்கை

வேலணை, வெள்ளி

தீவுப்பகுதி மக்கள் நாளாந்தம் பிரயாணத்தை மேற்கொண்டுவரும் அராலி இறங்கு துறைமுகங்களில் மக்கள் வெயில் காலத்திலும் மழை காலங்களிலும் பாதுகாப்பாகத் தங்கிச் செல்வதற்கான தங்கு மடங்களை அமைக்க வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் முன்வந்திருக்கின்றார்.

அராலித்துறை இரு கரைகளிலும் மாரி காலத்தில் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கான தங்குமடங்கள் இல்லாத காரணங்களால் எதிர்வரும் மாரி காலத்தில் இப்பாதை வழியாகச் சென்றுவரும் பிரயாணிகள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையுள்ளது.

இதையுணர்ந்து தங்கு மடங்களை அமைக்க பொதுமக்கள் மக்கள் அமைப்புக்கள் கல்விமான்கள், சமூக சேவை அமைப்புக்கள், தனியார் வாகனச் சொந்தக்காரர்கள், இளைஞர் அமைப்புக்கள், மற்றும் நலன் விரும்பிகளினது உதவியை வேலணை உதவி அரசாங்க அதிபர் நாடி நிற்கிறார்.

# இலங்கைக்கு 1965 கோடி ரூபா உதவி கிட்டும்

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் முழு நடப்பு வருடத்திற்கென 1965 கோடி ரூபாவை உதவித் தொகையாக வழங்குவதற்குமுன்வந்துள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (சிவ)

# பாலர்பாடசாலை

காரைநகர், வெள்ளி

அராலி மேற்கு கோட்டைகாடு கிராமத்திற்கு பாலர் பாடசாலை ஒன்றை பொறுாட் நிறுவனத்தினர் தொடக்கியுள்ளனர்.

விநாயகேஸ்வரா சனசமூக நிலைய தலைவர் திரு. நல்லதம்பி முயற்சியால் நிறுவப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பொறுாட் நிறுவனம் சத்துணவு வழங்க ஏற்ற ஒழுங்கு செய்துள்ளது.

# மீனுக்கு தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு சந்தையில் மீனுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இங்குள்ள மீன் சந்தையில் கடந்த சில நாட்களாக மீன் வருவது மிகவும் குறைந்து விட்டது. ஒரு சிலர் மீன்விற்க கொண்டு வந்தாலும் மிகவும் அதிக விலை சொல்லுகின்றனராம். கடல் கண்காணிப்பு தற்போது மிகத் தீவிரமாகியுள்ளதால் கடலில் மீன் பிடித்து வந்த சிலரும் அதனை அச்சம் காரணமாக கைவிட்டுவிட்டனராம்.

# உணவு முத்திரைகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்திற்கான உணவு முத்திரைகள் இம்மாத முடிவிற்குள் தகுதி உடையவர்களுக்கு வழங்கப்படுமென சமூக சேவைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த உணவு முத்திரைகள் யாழ். மாவட்டத்துக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற வன்செயல்களாலும், ஏனைய அசம்பாவிதங்களாலும் பாதிக்கப்பட்டு அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தவர்கள் மீண்டும் தமது பழைய இடங்களில் குடியேறிய பின்னரே உணவு முத்திரைகளுக்காக விண்ணப்பிக்கலாமெ என அவர் மேலும் தெரிவித்தார்.

(சிவ)

# கலைநிகழ்ச்சி

காரைநகர், வெள்ளி

மோட்டார்ஷெல் தாக்குதலின் மத்தியிலும் கலை நிகழ்ச்சி ஒன்று தொடர்ந்து நடைபெற்றது. மக்கள் கலைந்துவிடாது இருந்து இறுதிவரை இதனைப் பார்வையிட்டு சென்றனர். மேற்படி சம்பவம் காரைநகர் ஊரி கிராமத்தில் இடம்பெற்றது.

# சிங்கள மன்னர்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமது பாரம்பரியப் பிரதேசங்களிற்கு அப்பால் அம்மொழியில் கல்வெட்டுக்கள் இருப்பின் அம்மொழி நீதித்துறையில் அப்பிரதேசத்தில் செல்வாக்குடபெற்றிருக்க வேண்டும்.

இலங்கையில் காலி, சிலாபம், கம்பொல, குருநாகல், கண்டி. கோட்டை, கோட்டகம, பதவியா, பாலாமோட்டை, பொலநறுவை, செங்கடகல என்ற இடங்களில் அதிகளவு தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை நீதித்துறையில் தமிழ்மொழியின் செல்வாக்கைநிலை நிறுத்துகின்றன.

இலங்கையில் கோட்டை ஜெயவர்த்தனபுரவை தலைநகராகக்கொண்டு ஆண்டமன்னர்களில் தமிழ்க்கலப்பு இல்லாது அரசாண்ட மன்னர்கள் அரிது. அவர்களின் தகப்பன் சிங்கள அரசகுமாரனாக இருந்தால் தாய் கலிங்கத்தில் இருந்தோ, சோழநாட்டில் இருந்தோ வந்த இளவரசியாகத்தான் இருப்பாள்!

கோட்டை ஜெயவர்த்தனபுரத்தில் அரசாண்ட 6-வது பராக்கிரமபாகு தொடங்கி [1412 - 1468] தர்மபாலா [1551 - 1597] வரை இந்தக் கலப்பினக் கோட்பாட்டிலிருந்து தப்பவில்லை.

ஆறுவது பராக்கிரமபாகு தனக்குப்பின் தனது பேரனான தர்மபாலாவுக்குத்தான் அரசுரிமை வழங்கவேண்டும் எனத் நீதிமன்றில் இருந்து செல்லப்பு ஆராய்ச்சி என்டரை ஒருசிறிய தர்மபாலச் சிலையுடன் அனுப்பினான் இது நீதிமன்றத்தில் தமிழர்களினதும், தமிழ் மொழியினதும் மேன்மைநிலையைப் புலப்படுத்துகின்றது

பிராமணர்களின் ஆதிக்கமே நீதிமன்றங்களில் அதிகம் காணப்பட்டது தென்னிந்திய முறைறை ஒட்டியே நீதிவழங்கப்பட்டது. இதனால் தமிழ் மொழியில் இருந்த பங்கு, பங்குகாரர் நிந்தகம், ஊழியம், பட்டம், உழைப்பு என்பன சிறிய மாற்றங்களைக் கண்டு சிங்களமொழியில் சிங்கள உருவத்துடன் இணைந்தன. இக் காரணம்பற்றிய சிங்கள அறிஞரான டபிள்யு. எஃப். குணவர்த்தனா தமிழ் இன்றிச் சிங்களம் இயங்காது என்றும் சிங்களமும் ஒரு திராவிட மூல மொழியே என்றும் எடுத்து உரைத்தார்.


# Lipton

## லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிறும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493

# கிழக்கில் புதிய தமிழ் மாகாணம் உருவாக்கவேண்டும்

கொழும்பு, வெள்ளி

''கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள், மற்றும் கிராமங்களை உள்ளடக்கிய புதிய மாகாணத்தை உருவாக்கி அதனை வட மாகாணத்துடன் இணைக்க வேண்டும்'' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்

இனப்பிரச்னை தீர்வு குறித்து கூட்டப்பட்ட அரசியல் கட்சிகளின் மாநாட்டில் இ. தொ. காவும் கலந்து தமது கருத்தினை தெரிவித்த போதே திரு. செல்லச்சாமி இப் புதிய யோசனையை கூறியுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் கிழக்கு மாகாணத்தை முழுதாக வடக்குடன் இணைப்பது சாத்தியப்படாத தொன்று என்றும் கூறினார்.

(ரா - இ)

பாடசாலை உதைபந்தாட்டம்:

## சென். சாள்ஸ் கோஷ்டி இறுதிப்போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்.கல்வித் திணைக்களத்தினால், யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட ''நொக்கவுட்'' போட்டியில், 17 வயது பிரிவில், யாழ்ப்பாணம் சென். சாள்ஸ்மகாவித்தியாலயம், இறுதி ஆட்டத்தில் விளையாடத் தெரிவாகியுள்ளது.

யாழ். சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்கும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கடும் போட்டியில், சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் வெற்றிபெற்றது

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து, முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் திறமையாக விளையாடியதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இதன் பின் வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் சென் சாள்ஸ் வித்தியாலயம் வேகமாக விளையாடி அடுத்தடுத்த இரு கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நெல்லியடி மத்திய மகாவித்யாலதியத்தில்நடை பெற்றமற்றுமொரு போட்டியில், சென். சாள்ஸ் மகாவித்தியாலயம், ஹாட்லி கல்லூரியை 3-0 கோல்களால் வெற்றி பெற்றது

மேற்படி சுற்றுப் போட்டியில், சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம், இதுவரை எந்த ஒருபோட்டியிலும் தோல்வி அடையாத முன்னணியில் நிற்பது குறிப்பிடத்தக்கது.

(வி)

வலைப்பந்தாட்டம்:

## 'பமிலியன்ஸ்' சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்.றோட்டறிக் கழகம், யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்திய விளையாட்டு விழாவின் வலைப்பந்தாட்ட போட்டியில், யாழ் ''பமிலியன்ஸ்'' கோஷ்டி சாம்பியன் கேடயத்தைப் பெற்றது. (வி)

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அல்வின் ஆபிரகாம் அம்பலவாணர் ஞாபகார்த்த சபையின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை காரைநகர் சுப்பிரமணியவித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. சபைத்தலைவரின் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அல்வின் ஆபிரகாம் அம்பலவாணரை நினைவுகூரும் வகையில் அவரது திருவுருவப் படமொன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தினரால் சங்க மண்டபத்தில் நாளை திரைநீக்கம் செய்யப்படும்.

## இன்று கல்வி எழுச்சி விழா

புலோலி. வெள்ளி

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் சுருக்கெழுத்துக் கல்விஎழுச்சி விழாவொன்றை நடாத்தவுள்ளது. இச்சுருக்கெழுத்துக்கல்வி எழுச்சிவிழா இன்று அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளர் திரு. வி. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே விருந்தினர்களாக பருத்தித்துறை உதவி அரசஅதிபர் திரு.வை.வேலும்மயிலும் கரவெட்டி உதவி அரசஅதிபர் திரு. இ. ஐயாத்துரை மக்கள்வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் திரு. இ. சிவசிதம்பரம் அரசகருமமொழித்திணைக்கள அத்தியட்சகர் திரு. வி. சிவராஜசிங்கம் முல்லைத்தீவு மக்கள்வங்கி முகாமையாளர் திரு. எஸ். சேனாதிராஜா உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## மருந்து கலவையாளருக்கு பயிற்சி

புலோலி, வெள்ளி

சுகாதாரத்திணைக்களத்தால் மருந்துக் கலவையாளர்களாக நியமிக்கப்பட்ட 17 பேருக்கு பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்தவாரம் ஆரம்பமான இம்மருந்துக் கலவையாளர்களுக்கான பயிற்சிகள் ஆறு மாதங்களுக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லொழுக்க வாலிபர் சங்கம்

காரைநகர், செவ்வாய்

காரைநகர் சிவகௌரி நல்லொழுக்க வாலிபர் சங்கத் தலைவராக திரு அ நாகராசா தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு மு. பாலசுப்பிரமணியமும் உபதலைவராக க. கனகரட்ணமும் உபசெயலாளராக செல்வி சு.மகாலட்சுமியும் பொருளாளராக செல்வி க. இலங்காதேவியும் இவர்களுடன் ஆறுபேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

## வர்த்தகசங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், சனி

சுண்டிக்குளிப்பகுதியில்வியாபாரிகட்கு ஏற்படும் அநாவசிய தொல்லைகளைத் தவிர்ப்பதற்காகவும், பிணக்குகளைத் தீர்ப்பதற்காகவும் வர்த்தக சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. [த]

## அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

புலோலி, வெள்ளி

கற்கோவளம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை அபிவிருத்திச்சங்கப்பொதுக்கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. அ. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு அ. கருணாநிதி செயலாளர் திரு. எஸ் குழந்தைவேல் பொருளாளர் திருமதி கே. அன்னபாக்கியம்.

செயற்குழுஉறுப்பினர்கள் திரு. வை. துரைசிங்கம் திரு. ஆ. ஜெயபாலசிங்கம் திரு. வை. சோமசுந்தரம் திருமதி த. தம்பிராசா திருமதி நி. தியாகு திரு. நா. பாக்கியநாதன்- (இ)

## சிரேஷ்ட உபதலைவர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

அகில இலங்கை கணக்காளர் சேவைச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பிலுள்ள ஜோன் டி. சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது அதன்சிரேஷ்ட உபதலைவராக திரு.எஸ் எக்ஸ் ஞானசேகரம் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ் பிரதேச சுகாதாரசேவை பணிப்பாளர் அலுவலகத்தில் பிரதமகணக்காளராக கடமையாற்றும் திரு ஞானசேகரம் ஆறுவருடங்கள் சங்க சிரேஷ்ட உபதலைவராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## விழிப்பு மன்றத்தின் சேவை

சுண்டுக்குளி, வெள்ளி

ஆனைக்கோட்டை வடக்கு விழிப்பு மன்றம் ஆரம்பமாகி ஒன்றரை மாத காலத்தில் இதுவரை பதினேழு வழக்குகள் மக்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ஏழு வழக்குகள் விசாரணை மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

தீர்க்கப்பட்ட வழக்குகளில் காணிப் பங்கீடு, சீதன தகராறு, வாளால் வெட்ட முயன்றமை தாபரிப்பு பணம் பெறல் போன்றவை அடங்குகின்றன.

## மாணவர் கண்டிக்கு செல்ல அச்சம்

கிளிநொச்சி, வெள்ளி

கூட்டுறவு பரிசோதகர் பயிற்சிக்கான விரிவுரைகள் பொல்கொல்ல கூட்டுறவுக் கலாசாலையில் நடைபெறவுள்ளதால் வடக்கு கிழக்கில் இருந்து இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கண்டிக்கு செல்ல அச்சம் கொண்டுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள இவ் விரிவுரைகள் தமிழ் மாணவர்கள் நன்மை கருதி யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

NEW SCIENCE ACADEMY
B M.C. க்கு முன் யாழ் பாணம்
A/L 87 புதிய பகுதிகள் 26-07-86
மின்னியல்: திரு. மணியம் B. Sc. சனி/ஞாயிறு 9.30
பௌதீக இரசாயனம்:
திரு. யூனியன் மணியம் B.Sc. சனி/ஞாயிறு 10-30
விலங்கியல்: திரு. இளங்கோவன் B.Sc.
தாவரவியல்: திரு. சர்வா B.Sc.
தூய, பிரயோக கணிதம்:
[A 1006] திரு. வெக்டர் வேலாயுதம் B.Sc.

பிரயாண ஒழுங்குகள்
சவூதியிலுள்ள Pepsi Cola குளிர்பான தொழிற்சாலைக்கு ஆட்கள் தேவை. பிரயாணம் 3 கிழமைகளில் ஒழுங்குசெய்து தரப்படும் அத்துடன் ஈராக் நாட்டில் கட்டிடப்பகுதிக்கும் ஆட்கள் தேவை. சிகை அலங்கரிப்பவர்களுக்கும் உதவிசெய்யப்படும். பாஸ்போட் மற்றும் 6படங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.
K. A. கனகரட்ணம்,
255, பருத்தித்துறை வீதி,
ஊறணி, காங்கேசன்துறை.
[C-3693]

எமது புதிய வெளியீடுகள்
விஜயகாந்த் ★ ரேவதி ★ லட்சுமி
1. எனக்கு நானே நீதிபதி [Camera Copy]
விசு ★ S. V. சேகர் ★ இளவரசி
2. சம்சாரம் அது மின்சாரம் [Camera Copy]
தியாகராஜன் ★ நளினி
3. காவல் [PYRAMID MASTER]
ராஜீவ் ★ லட்சுமி ★ ரஞ்சனி
4. நீதானா அந்தக் குயில் [Pyramid Master]
சிவாஜி ★ பிரபு ★ ஸ்ரீப்பிரியா
5. சங்கிலி [Pyramid Master]
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665. [C-3704]

88 III-ம் பிரிவு
A/L வகுப்புக்கள் ஆரம்பம்
02-08-1986 சனி காலை 9-30மணி

| | | | | |
|---|---|---|---|---|
| PHYSICS | — | 9-30 | - | 10-30 |
| CHEMISTRY | — | 10-30 | - | 11-30 |
| ZOOLOGY | — | 11-30 | - | 12-30 |
| BOTANY | — | 12-30 | - | 01-30 |
| PURE and APPLIED MATHS | — | 11-30 | - | 01-30 |

விபரங்கட்கு:-
NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
[A-1007]

## பரிதாபமான அன்னையின் வேண்டுகோள்

பணிவான இயக்கங்களின் கவனத்திற்கு

எனது மகன் தம்பிமுத்து சத்தியமூர்த்தியை கடந்த வருடம் தை மாதம் 10ந் திகதி. பருத்தித்துறை செட்டித்தெருவிலுள்ள ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி J. V. பிள்ளையின் வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவர் யாரால், என்ன காரணத்துக்காக கடத்தப்பட்டார் என்பதை இதுவரை என்னால் அறியமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறேன். இவர் கடத்தப்பட்ட நாளில் இருந்து நானும் எனது கணவரும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கின்றோம். எங்களைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை. இவரைக் கடத்திச் சென்ற நாள் முதல் கம் நரம்புநோயால் மரணத்தைத் தழுவ இருக்கின்றோம்.

புனிதமான இயக்கங்களே, தம்பிமுத்து சத்தியமூர்த்தி எங்கிருக்கின்றார் என்பதை மரணத்தின் விளிம்பில் இருக்கும் தாய் தந்தையருக்கு தெரிவியுங்கள். அவரைஒருமுறை பார்க்க அனுமதியுங்கள்.

திருமதி த. நல்லம்மா.

மானிப்பாய் வீதி,
உடுவில்,
சுன்னாகம்

[C 3689]

# பாதிக்கப்பட்ட நிலையிலும் பசுமைப்புரட்சியிலீடுபட்டுள்ள தமிழ் விவசாயக் குடும்பங்கள்

## கருந்தரங்கில் விளக்கம்

வட்டுக்கோட்டை, வெள்ளி

'தமிழ் பேசும்விவசாய குடும்பங்கள் வாழ்வா சாவா என்ற ஓர் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையை இன்று நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் ஏறக்குறைய பதினையாயிரம் விவசாய குடும்பங்கள் அகதிகளாக பட்டினியால் தவிக்கின்றமையை அவதானிக்க முடிகிறது; இப்படியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளிலும் சோதனைகள், வேதனைகள் மத்தியில் விவசாயிகள் உற்சாகம் இல்லாத நிலையில் பசுமைப்புரட்சி நடவடிக்கைகளை கவனித்து வருகின்றமையையும் அவதானிக்க முடிகிறது'.

இவ்வாறு யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு சந்தசாமி பரமலிங்கம் சங்கானை பொது நூல்நிலையத்தில் மறுமலர்ச்சி மன்றத்தலைவர் திரு பொ செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற ''விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு'' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ். அபிவிருத்திச்சபை மின்சார அத்தியட்சகர் திரு பொ.ஜெயரட்ணசிங்கம் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆசியுரையுடன் ஆரம்பித்து வைத்தார்.

சங்கானை கிழக்கு பிரிவு பயிர்ச்செய்லக உத்தியோகத்தர் திரு ஜீ. சிதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

### இன்றியமையாத உப உணவு

திரு. பரமலிங்கம் தொடர்ந்து பேசுகையில்; மழை காலங்களில் பட்டினியை தவிர்ப்பதற்கு குரக்கன் போன்ற சிறு தானியங்களையும் ஒடியல், பனாட்டு, கருவாடு போன்ற நீண்டநாட்களுக்கு பழுதடையாமல் சேமிக்கக் கூடிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தும் அவசர கால நிலைமைகளில் பெரிதும் உதவக்கூடிய வீட்டுத்தோட்டங்களின் அபிவிருத்திகளில் கவனம் செலுத்தியும் கால்நடைகளின் உணவுத்தேவைகளை பூர்த்தி செய்ய மரங்களை பரவலாக நட்டு வளர்க்க உதவியும் ஒவ்வொரு பிரஜையும் சமூகத்தில் முன்மாதிரியாக செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு செய்கை இரண்டாயிரம் ஏக்கரில் செய்யப்பட்டது தற்பொழுது திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது இவ்வருடம் முந்நூறு ஏக்கர் செய்கை மட்டும் உள்ளமை கவலைக்குரியது இப்படியாக வெங்காயம் போன்றவையும் உற்பத்திகளில் வீழ்ச்சி நிலையை கவனிக்க முடிகிறது என்று கவலை தெரிவித்தார்.

### பட்டினியை போக்க பசுமைப் புரட்சி

''சிவதர்ம வள்ளல்'' திரு. க கனகராஜா ஜே பி. மரக்கன்றுகளையும், விதைகளையும் வழங்கி ஆசியுரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது; ''வியட்னாம் மக்கள் யுத்த உச்சக்கட்டத்திலும் பட்டினியை போக்க பல இன்னல்கள் மத்தியிலும் பசுமைப் புரட்சிகளில் தீவிர கவனம் செலுத்திய வரலாற்றுக் குறிப்புகளை நாம் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். மண் கூடாது என்ற நொண்டி சாட்டுக்களை கூறிக்கொண்டு பூமித்தாயின் கருணையைப் பயன்படுத்தாதுவிடலாகாது'' என்றார்

சங்கானை கிழக்கு பிரிவு விவசாயிகள் குழு பொதுச் செயலாளர் திரு க. வீரசிங்கம் கலந்து கொண்டவர்களுக்கு விதைகளை அன்பளிப்பு செய்தார்.

யாழ். மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ண பிள்ளை உரையாற்றுகையில்; முருங்கை மூளை விருத்திக்கு உதவும், மூலிகை தாவரங்கள் பல உணர முடியாத நோய்களை குணப்படுத்தும், இயற்கை பசளை தட்டுப்பாட்டையும் சுத்தமான பால் தட்டுப்பாட்டையும் நீக்க வீட்டுக்கு குறைந்தது ஒரு பசு வளர்க்க முன்வர வேண்டும் என்றும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு கால தாமதம் இன்றி ''விவசாய கடன்'' திட்டங்களை அமுல்படுத்தி உதவ முன்வர வேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

### அரசியல் ஊடுருவல் அபிவிருத்தியை தடுக்கும்

பேராசிரியர் கா சதாசிவம் பிள்ளை உரையாற்றுகையில்: மத்திய அரசின் கட்டுப்பாடு அதிகம் இருக்கும் பட்சத்தில் எச்சந்தர்ப்பத்திலும் விவசாயத்துறையில் பூரணமுன்னேற்றம் ஏற்படாது என்றும் எல்லாவற்றுக்கும் மேலாக எமது சமூகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொதுநலஅமைப்புகளில் உரிய திறமையானவர்கள் பல நல்ல காரியங்களை, கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கூடியவர்கள் இல்லை என்றும், அரசியல் ஊடுருவல் தொடருமானால் உண்மை அபிவிருத்திகள் தடைப்படும் என்றும் கவலையும், கண்டனமும் தெரிவித்தார்.

நிர்வாக உத்தியோகத்தர் திரு எஸ். குமாரவேல், பெரும்பாக உத்தியோகத்தர் திரு பி சூசைப்பிள்ளை, விவசாய போதனாசிரியர்கள். திரு. ச. தம்பிராஜா, திரு. கதிரமலை விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன், சங்கானை பட்டின சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். குமாரசாமி, பிரதம நூலகர் திரு செ யோ. செல்வராஜா ஆகியோர்கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சங்கானை - சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவிகளின்விவசாய பாடல் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. [ஆ]


லிடோ

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ்-சரிதா நடித்த

மௌனகீதங்கள்

(கலர் - புதிய பிரதி)

எமது அடுத்த வெளியீடு

புதுமைப் பெண்

[புதிய பிரதி]

வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

[புத்தம் புதிய பிரதி]

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


## ''ஸ்தாபனத்தின் ஒழுங்கு விதிகளை மீறுவோரை அனுமதியோம்''

### ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், சனி

'பொது நலன்களுக்காக சொந்த நலன்களை கீழ்ப்படுத்தி மக்களின் விடுதலைக்காக உழைக்காது தமது நலன்களுக்காக ஸ்தாபனத்துடன் ஒட்டி உறவாடுபவர்களையும், ஸ்தாபனக் சட்டுப்பாடுகள், ஒழுக்க விதிகளை மீறுவோரையும நாம் அனுமதிக்கப் போவதில்லை. இவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மக்களுக்கு அறியத்தருகிறோம்'

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

'பல்வேறு இழப்புக்கள் சிரமங்கள் மத்தியில் எமது விடுதலைப் போராட்டம் முன்னேறி வருகிறது. எமது சமூக அமைப்பின் குறைபாடுகள் போராட்டத்தின் போக்கிலும் விடுதலை இயக்கங்கள் மத்தியிலும் பிரதிபலிக்கவே செய்கின்றன. விடுதலை இயக்கங்களில் இணைந்து செயல்படும் உறுப்பினர்கள் மத்தியில் நிலவும் சமூக அமைப்பின் குறைபாடுகள் காணப்படவே செய்யும். இக்குறைபாடுகள் களைந்தெறிய வேண்டியதும், திருத்த முடியாத நபர்களை விடுதலை அமைப்பிலிருந்து தூக்கி வீசவேண்டியதும் மிக முக்கியமானதாகும் எமது அமைப்பிலுள்ள தவறான நபர்களை நாம் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதால் எமது அமைப்பு பற்றி தவறான கருத்து உருவாகிவிடும் என்று நாம் அஞ்சவில்லை. உண்மைகளை மக்கள் முன் வைப்பதும் தனது தவறுகளை ஒப்புக்கொண்டு அதை திருத்த முன்வருவதும் மட்டும சிறந்த வழிமுறையாகும்

கடந்த 24ந் திகதி அன்று நடேசபிள்ளை சிவானந்தம் [சுரேஸ்], கச்சாய் தெற்கு கொடிகாமம் தம்பிஐயா சிறீக்குமார் (சைமன்) மிகருடாவில் சாவகச்சேரி ஆகிய இருவருக்கும் மொட்டையடித்து, மக்களின் பார்வைக்காக சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கட்டப்பட்டனர். ஸ்தாபன உடைமைகளை களவாடிவிற்றது தம்மை இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களாகக் காட்டி மக்கள் மத்தியில் தவறாக நடந்துகொண்டது, பெண்களுடன் தகாத முறையில் நடந்தது, ஸ்தாபனக் சட்டுப்பாடுகள் ஒழுக்கவிதிகளை மீறியது போன்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதின் அடிப்படையில் இவர்கள் இருவரும் மக்கள் விடுதலைப் படையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் ஸ்தாபனப் பெயரிலோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ மக்களின் நலன்களுக்கு எதிராக செயற்படும் பட்சத்தில் நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை மக்களுக்கு அறியத்தருகின்றோம்.''

கடற்படையினரால் பலியான———

# இந்திய மீனவர்களுக்கு வேலணையில் நினைவுத்தூபி

யாழ்ப்பாணம், சனி

படையினரால் இந்தியக் கடற்பகுதியில் கொல்லப்பட்ட, வேலணைப்பகுதியில் கரை ஒதுங்கிய இந்திய மீனவர்களுக்கு நினைவுத்தூபி ஒன்று வேலணை துறையூர் கடற்தொழிலாளர் அபிவிருத்திச் சபையால் அமைக்கப்பட்டு கடந்த24ம் திகதி மாலை இத்தூபி திறந்து வைக்கப்பட்டது

இந் நினைவுத் தூபித் திறப்பு வைபவத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் திரு. டேவிற்சன் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அவர் தனது உரையில் கூறியதாவது: ''தமிழக மக்களும் ஈழமக்களும் கடலால் பிரிக்கப்பட்ட போதிலும் உள்ளத்து உணர்வுகளால ஒன்றுபட்டிருக்கின்றார்கள். இதைத்தான் இந் நினைவுத்தூபித் திறப்பு நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. கடந்த காலங்களில் ஈ மக்கள் படுகொலையானபோது அரசின் படைகளால் எமது மண் சாம்பல் மேடானபோது தமிழக மக்கள் எரிமலையின் சீற்றத்துடன் பொங்கி எழுந்தனர். எமது விடுதலைப் போருக்கு பக்க பலமாக வலுவூட்டும் சக்தியாக தமிழக மக்கள் கடந்த காலத்தில் செயற்பட்டு வந்தனர்.

இந்திய மக்களும் தமிழக மக்களும் உணர்வுபூர்வமாக குரல் கொடுத்த காரணத்தால் எமது போராட்டம் சர்வதேச அரங்கில் ஏற்றுக் கொள்ளக் கூடிய போராட்டமாகப் பரிணமித்தது. நீதியான எமது போராட்டத்திற்கு ஆதரவாக தமது கரங்களை உயர்த்தும் தமிழக மக்களை அரசு எதிரிகளாகக்கருதுகின்றது இதன் பிரதிபலிப்பாகவே இந்தியக் கடற்பகுதியில் ஊடுருவி தமிழக மீனவர்களை அரச படை வேட்டையாடுகின்றது.

''அண்மையில் இலங்கையின் இந்தியத் தூதரக அதிகாரி திரு பூரி இங்கு வந்தபோது இங்குள்ள உண்மை நிலைமையை அறிந்து கொள்ளாமல் தடுக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டன இந்திய மண்ணில்எமது போராட்டத்திற்கு ஆதரவாக ஏற்பட்டுவரும் எழுச்சி கண்டு அரசால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதையே இச் சம்பவம் காட்டுகின்றது''.

## குண்டுவெடித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே செல்லவிட்டனர்

இதேசமயம் சச்சேரிவாசலில் குண்டொன்று வெடித்தது உள்ளேசென்ற சகல ஊழியர்களும் உடனடியாக வெளியேறிவிட்டனர் கச்சேரி வேலைகள் ஸ்தம்பி மடைந்தது

மேலும் ரயில் நிலையம் மற்றும் வங்கி அலுவலகங்கள்முன்னிலையிலும் குண்டுகள்வெடித்தன. மட்டகளப்பு நகரம் உட்பட சகலவீதிகளும்வெறிச்சோடிக்காணப்பட்டன.

## வடக்கும் கிழக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாகச் சென்று வரவு ஏட்டில் கையெழுத்திட்டதாகவும் கூறப்படுகிறது

இப்படியான சம்பவங்கள் தொடர்பாக இணைப்புக்குழுவினர் ஆராயவிருப்பதாகவும இணைப்புக்குழு உறுப்பினர் ஒருவர் தெரித்தார்.

வடமராட்சி, தென்மராட்சி உட்பட யாழ். குடாநாட்டில் சகல அரசாங்க காரியாலயங்கள், கல்லூரிகள், சந்தைகள் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன

கிராமப்புறங்களில் கூட, மக்கள் வெளியில் நடமாடவில்லை. உள்ளூர் தொலைக் காட்சிச் சேவைகளும் நேற்று நடைபெறவில்லை

ஒவ்வொரு பகுதியிலும் முக்கிய இடங்களில் நேற்று நண்பகல் அப்பகு மக்கள் கூடி எதிர்ப்புதினக் கூட்டங்கள் நடாத்தினார்கள். சில இடங்களில் ஒன்றுகக்கூடி மௌனப் பிரார்த்தனை நடத்தினார்கள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் எதிர்ப்பு தினம் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டது. [க]

## வடக்கு,கிழ. தமி..

1ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமானதல்ல என்றே அவர்கள் கூறுகிறார்கள்.

''சிங்கப்பூர், கனடா, சுவட்சர்லாந்து போன்ற நாடுகளைப் பற்றி அவர்கள் அறியாதவர்களாகவுள்ளனர். இரு மொழி ஒரு நாடு ஒரு மொழி இரு நாடு' என டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறியதைச் சரியென நிரூபிக்கவே இவர்கள் விரும்புகிறார்கள். கொல்வின் ஆர். டி. சில்வா, 30 வருடங்களுக்கு முன்னர் கூறிய கூற்று சரியென மிக விரைவில நிரூபிக்கப்படப் போகின்றது என எனக்குத் தோன்றுகிறது.

''தமிழர்களுக்கென ஒரே மொழி ரீதியான பிராந்தியம் அதாவது பாரம்பரியத் தாயகம இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும என்பதே தமிழர்களின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாவது அடிப்படைக் கோரிக்கையாக இருந்து வருகிறது. நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களே அப்பிராந்தியங்களாகும் (க)

## மதவாச்சி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ளானவர்கள்

கந்தசாமி என்பவர் வயிற்றில் கத்திக்குத்துக் காயத்துடன் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

இத்தாக்குதல் சம்பவத்தின் போது பொலிஸார் ரே ந்து சுற்றி வந்ததாகவும் அதனைத் தொடர்ந்து குண்டர்கோஷ்டி அவ்விடத்தை விட்டு ஓடிதலைமறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## மன்னாரில்..,

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மன்னாரைச்சேர்ந்த யோகநாதன் [20வயது] என்பவரே பலியானவராவார் இவரது சடலம் மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சாவக்காட்டைச் சேர்ந்த புஷ்பலதா [26 வயது] என்பவர் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சென் சேவியர் கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர்கைதுசெய்யப்பட்டவராவார்.

இது இவ்வாறிருக்க மன்னார் மாவட்டத்தில் 83 ஜூலையில் இடம்பெற்ற தமிழர்கள்படுகொலை செயயப்பட்ட நினைவு தினத்தை ஒட்டிக் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முழு அளவிலும் பூரண எதிர்ப்புத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. [மா]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 26-7-86

## வடக்கு வரும் இரு சீனிக் கப்பல்கள்

சண்டுக்குளி. வெள்ளி

சுாங்கேசன்துறை துறைமுகத்திற்கு இன்று 1150 தொன் எடையுள்ள சீனியை ஏற்றிக்கொண்டு ''ஊவா'' என்னும் கப்பல் புறப்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து மற்றுமொரு சீனிக்கப்பல் இங்கு வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நயினையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்

பண்டத்தரிப்பு, வெள்ளி

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 5-ம் திகதி ஆரம்பமாவதை முன்னிட்டு ஆலய வீதியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவி சிகிச்சை முகாம் பக்தர்களின் நலன் கருதி உற்சவகாலம் முடிவடையும்வரை செயற்படவுள்ளது.

ஆலய பரிபாலனசபையினர் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுசந்தன் இன்னாசித்தம்பியுடன் தொடர்புகொண்டு விடுத்த வேண்டுகோளை அடுத்து அங்கு திரு. செல்வரஞ்சன் தலைமையில முதலுதவிச் சிகிச்சை முகாம் நிறுவப்படவுள்ளது. வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியவற்றிலும் இப்படையின் தொண்டர்கள் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி · முல்லைத்தீவு கல்வி மாவட்டங்களில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குக் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக் கிழமை பரீட்சை அறிவுறுத்தல் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

யாழ் கல்வி மாவட்ட உத்திரோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பினை அடுத்து முலலைத்தீவு கிளிநொச்சி மாவட்டப பரீட்சை உத்தியோகத்தர்களுக்கு வகுப்புகள் நடைபெறும் எனக் கிளிநொச்சி- முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தெரிவித்தார்.

வவனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரீட்சை அறிவுறுத்தல் வகுப்பில் கலந்துகொள்ளாத சகல பரீட்சை உத்தியோகத்தர்களையும் இவ்வகுப்பில் கலந்துகொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். [ஐ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

# தமிழ் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு சுயாட்சி

## வழங்கத்தயார் - 'அமிர்'

கொழும்பு வெள்ளி

''வடக்குக் கிழக்குமாகாணங்களில் பரந்து வாழுகின்ற முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளை நாம் நிறைவேற்றி வைக்கவேண்டும் அதற்குநாம் தயாராக உள்ளோம் எனவே இன்றைய சூழ்நிலையில் அடிப்படைப் பிரச்னை சம்பந்தமாக நாங்கள் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டியது அவசியமாகும்''

கூட்டணி குழுவினர் இங்கு தங்கியிருந்தபோது அவர்களை சந்தித்த கிழக்கு மாகாணமுஸ்லிம் பிரமுகர்கள் குழுவிடம் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு ஏ. அமிர்தலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்,

கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த ஏறுவூர், ஓட்டமாவடிகாத்தான்குடி பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்கள் காத்தான்குடிமுன்னாள் நகரசபைத் தலைவர் ஜனாப் அகமது லெவ்வை தலைமையில் கூட்டணிப்பிரமுகர்களைக் கொழும்பில் சந்தித்தனர்.

### எது உங்கள் முடிவு?

இச்சந்திப்பின்போது திரு அமிர்தலிங்கம் 'வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ்மாநிலத்தில் முஸ்லிம்மக்கள் எதிர்பார்க்கும் அபிலாஷைகள் என்ன? தனியான சுயாட்சி அமைப்பா? அல்லது தமிழ் மக்களுடன் இணைந்து சம உரிமையுடன் வாழவேண்டுமென்ற விருப்பமா? என்பனபற்றி முஸ்லிம் மக்கள் திட்டவட்டமாக தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### இன்றைய நிலையில்...

இன்றைய சூழ்நிலையி எமக்குள் கருத்து வேற்றுமைகள், பிளவுகள் எதுவும் இருக்கக்கூடாது. எமது அடிப்படைப் பிரச்னைகளில் நாம் ஒன்றுபட்டுச்செயலாற்றவேண்டும் அதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச்செயலாற்ற வேண்டும். அதற்கு நாம்அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

### தமிழ்மாநிலத்தில் உரிமைகள்

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாகவும், தமிழ் மாநில அமைப்பில் முஸ்லீம்களின் அடிப்படை உரிமைகளுக்கு அளிக்கப்படும் உத்தரவாதம் சம்பந்தமாகவும் முஸ்லீம்களுக்கு சுயாட்சி உரிமை எந்தளவுக்கு உண்டு என்பதை கூட்டணியினர் பகிரங்கப்படுத்தவேண்டும் என்று முஸ்லிம் பிரமுகர்கள் வற்புறுத்திக் கேட்டனர்.

இதற்குப்பதிலளித்து திரு. அமிர்தலிங்கம். தமிழ்மாநிலக் கோரிக்கையைத் தவிர வேறு எந்தத்தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும்தீர்வாக அமையமாட்டாது தமிழ் மாநிலத்தில் முஸ்லீம்மக்களுக்கு சுயாட்சி வேண்டுமென்றால் அதனைப் பூர்த்திசெய்ய நாம் தயாராக இருக்கிறோம் என்று உறுதியளித்தார்.

முஸ்லீம் பிரமுகர்களின் சந்திப்பை அடுத்து அகில இலங்கை முஸ்லீம்லீக் தலைவர் டாக்டர் எம் ஸி எம். கலீலின் இல்லத்தில் முஸ்லீம் தலைவர்களான டாக்டர் எம். ஸி எம். கலீல் அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் ஜபீர், ஏ. காதர் எம் பி. ஆகியோரையும் கூட்டணித்தலைவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் [வா]

## பூனைவைச் சம்பவம்: தப்பியவர் பத்திரிகைக்குப் பேட்டி

கொழும்பு, வெள்ளி

''பஸ்ஸின் பின் பகுதியில் மூன்றுபெரிய சாக்குமூடைகள் இருந்தன. அவை கருவாட்டு மூடைகள் என்று நினைத்தோம். பஸ் சென்றுகொண்டிருக்கையில் ஒரு பாரிய சத்தத்துடன் அதிலிருந்து குண்டொன்று வெடித்ததைத் தொடர்ந்து இருவர் மேல் நோக்கி வீசப்பட்டார்கள். சடலங்கள் சிதறி இரத்த வெள்ளத்தில் மிதந்தன.''

இவ்வாறு பூனைவை பஸ் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிறுகாயங்களுடன் உயிர் தப்பிய திட்ட அமுலாக்கல் அமைச்சில் பணிபுரியும் உத்தியோகத்தரான திரு. டபிள்யூ. ஏ. சோமதாஸா என்பவர் தமது அனுபவத்தை ஆங்கிலப்பத்திரிகை யொன்றுக்கு அளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார்.

மாமடுவைச் சம்பவத்தில் பலியான தமது மைத்துனர் ஒருவரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு விட்டுத்திரும்புகையிலேயே மேற்படிஅனர்த்தம் நிகழ்ந்ததாக திரு. சோமதாஸ பேட்டியில் தெரிவித்தார்,

இச்சம்பவம் தொடர்பாக திரு அல்போன்ஸ் (43வயது) என்பவர் அளிததுள்ள பேட்டியில் தமது முன்னாலேயே பல பயணிகள் உயரத்தூக்கி வீசப்பட்டனர்என்றும் இதன்போது பஸ் இருவேறு துண்டுகளாகப்பிளந்து சிதறியது என்றும் இதனால் தமது செவிப்புலனும் செயலிழந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். [பி]

## கசிப்பு, மாட்டிறைச்சி விற்பனைக்குத் தடை

சுன்னாகம் வெள்ளி

புன்னாலைக்கட்டுவன் இணக்கசபையால் புன்னாலைக்கட்டுவன்பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனை, அருந்துதல் என்பன தற்பொழுது முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளன. இதில் ஈடுபட்டுள்ளவர்கள் உடன் நிறுத்தாவிட்டால் கஷ்டத்தையும்நஷ்டத்தையும் ஏற்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

கள்ளச் சாராயம் விற்றல் தடைசெய்யப்பட்டுள்ளதென்றும் களவாக மின்சாரமெடுத்தலும் மாட்டிறைச்சி விற்றலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதென்றும் ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டது,

## சுழிபுரம் பகுதியில்

சுழிபுரம் வெள்ளி

சுழிபுரம், தொல்புரம், பொன்னாலை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலும் களவாக பசுமாடு வெட்டுபவர்கள், விற்பனை செய்பவர்கள் குடிவகைகுடித்துத் தொல்லைகள் கொடுப்பவர்கள், களவாக மணல் கடற்கரையில் அள்ளிவிற்பனை செய்பவர்கள் யாவரும் தண்டனைக்குள்ளாக்கப்படுவதுடன் பெருந்தொகை பணம் குற்றமாகவும் அறவிடப்பட்டுள்ளதாக பொதுஇயக்கதமான்றினால் அறிவிக்கப்பட்டுள்ளது. சந்திகள் தோறும் வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகைகளில் மேற்கண்ட எச்சரிக்கை வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன,

பசுக் கொலையை தடுப்பதற்குச் சமய நிறுவனங்கள் தம்மாலான உதவிகளைச் செய்ய சம்பந்தப்பட்ட இயககங்களுக்கு ஒத்தாசை வழங்கியுள்ளனர்.

## காயமடைந்தவர் காலமானர்

வவனியா, வெள்ளி

கடந்த புதன்கிழமை வவனியாவில் முகாந்தரம் வீதியிலுள்ள கடையொன்றின் முன்னால் குண்டு வெடித்ததில் படுகாயமடைந்த முத்துலிங்க என்பவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் நேற்று காலமானார்.

இச் சம்பவத்தில் ஆறு தமிழர் இரண்டு முஸ்லிம்இரண்டு சிங்களவர் காயமடைந்தது தெரிந்ததே.

## மீண்டும் ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 10-35க்கு வந்தடையும். வவனியாவிலிருந்து பி ப. 2-30க்குப் புறப்படும் ரயில் இரவு எட்டு மணிக்குகொழும்பு மருதானையைச் சென்றடையும்.

புதுப்பிக்கப்பட்ட ரயில் கட்டணங்கள் வருமாறு 3-ம் வகுப்பு 38ரூபா 20 சதம், 2-ம் வகுப்பு ரூபா103ரூபா 90சதம். [ஷ]

## அன்னையர் முன்னணி ஊர்வலம்

சுண்டுக்குளி வெள்

1983ம் ஆண்டு ஜுலைமாதம் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை சம்பவங்களில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ். அன்னையர்முன்னணி நேற்றுக் காலை கச்சேரிநல்லூர் வீதியிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு யாழ் செயலகத்தை வந்தடைந்தனர்.

## தமிழீழ ராணுவம் அஞ்சலி

(யாழ்ப்பாணம், சனி

யாழ் கோட்டை முகாமிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தனரின் முயற்சியை முறியடிக்கும் வகையில் இடம்பெற்ற மோதலில் நான்கு 'தமிழ் ஈழ ராணுவ போராளிகள' பலியாகியுள்ளனர் நேற்று முன்தினம் நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

லெப்ரினன்ட் பிரபா (கல்வியங்காடு) இரண்டாவது லெப்ரினன்ட் செல்வம் ஒட்டுமடம்) கோப்ரல் லோகேஸ்வரன் (திருமலை) கோப்ரல் ரவி (வவனியா) ஆகிய நான்கு பேராளிகளே பலியானர்வர்களாவர்.

இவர்கள் நினைவாக நேற்று அஞ்சலி செலுத்தி களத்தில் பலிகொடுத்தோம். கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம் என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று 'தமிழ்ஈழ ராணுவத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## வல்வை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

பொருட்களை எடுத்துச் சென்ற சமயம் வள்ளங்களில் வெள்ளைக் கொடிகளையும் பறக்க விட்டு கடற்படையினர் தாங்கள் சமாதான விரும்பிகள்போல் காட்டினார்கள்.

கலவரத்தடன் கரையில் நின்ற மற்ற மீனவர்கள் கடற்படையினரின் புதிய நடைமுறையைப் பார்த்த வண்ணமிருந்தனர்,

கப்பலில் இருந்த பொருட்கள் யாவும் முகாமிற்கு எடுத்துச் சென்றபின் நான்கு வள்ளங்களையும் மீனவர்களையும் கரை செல்ல அனுமதித்தனர்.

## செட்டிகுளத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அ· தாமோதரம்பிள்ளை, [65] நெடுங்கேணி சி. சேனாதிராசா (25) வவனியா, என். சிவநேசன் [20] கோவில்புதுக்குளம், பி. கணேஸ் [15] உடப்பு கமால்தீன் இமால் [20] பண்றிச்செய்தால் காபூல் [சமீது சுகியான் [27] நீரியகுளம் பி. துரைசாமி [24] குளக்கோட்டம் சி சிங்கராசப [27] வவனியா எஸ். குகதாஸ் [23] வரணி. [சிவ]

## மரண அறிவித்தல்

### வே. நாகலிங்கம்

ஒய்வு பெற்ற கணக்காளர் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை அம்பாறை, (R. V. D. B.)

இவர் சண்டிலிப்பாய் காலஞ்சென்ற திரு. வேலுப்பிள்ளை, திருமதி நாகம்மாவின் அன்பு மகனும், நாகரத்தினத்தின் அன்புக்கணவரும், சற்குணநாதன் (Sugar Cane Farm, அம்பாறை), வேலுப்பிள்ளை (France), விஜயகுமார் (U. K). விக்கினேஸ்வரன் (France), சந்திரகுமார் (U. K), அருந்ததி, ரஞ்சனி, சகுந்தலா, விஜயாகினி (India) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேஸ்வரி, சிவஞானமதி, நிர்மலாதேவி M. Sc (U K), இந்திராணி, புவிராஜ் (R. G. S. T Technical Supervisor Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்யா, திருவேணி, யாழினி, கவிராஜ், வேல் ஈசன் (France) ஆகியோரின் அன்புப் பேரனும். திருமதி நாகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 27-7-86 நாளை ஞாயிற்றுக்கிழமை 4-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி நாகலிங்கம் மனைவி), பிள்ளைகளும். சோத்துப் பிடிச்சி, சண்டிலிப்பாய்.

C 3714)